பக்கங்கள்-16 | 27,ஆனி.2021 | விலை-30.00




# தினப்புயல்

PTN news
THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -350




## அரசியல் கைதிகள் விடுதலை பின்னணியும் நாமல் ராஜபக்ஷவின் பிரதமர் இலக்கும்

## ரணிலின் பாராளுமன்ற மீள்வருகை, நடக்கப்போவது என்ன?

## நாட்டை மறுசீரமைக்க முடியாத நிலையில் ஜனாதிபதியின் உருக்கமான உரை

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# அரசியல் கைதிகள் விடுதலையின் பின்னணியும், நாமல் ராஜபக்ஷவின் பிரதமர் இலக்கும்



இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தீவிரவாதம், பயங்கரவாதம் இந்த இரண்டும் இந்நாட்டில் இல்லாதொழிக்கப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருப்பது போன்ற ஒரு வெளித்தோற்றப்பாட்டைக் கொண்டிருக்கின்றார்களே தவிர இந்த தீவிரவாதம், பயங்கரவாதம் இரண்டையும் வைத்தே அன்றிலிருந்து இன்று வரை தமது அரசியலை முன்னெடுத்து வருகின்றது.

காலத்தின் தேவை கருதி பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டிய தேவை அரசிற்கு ஏற்பட்டாலும், இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டோர், விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்டோர், தண்டனைகள் ஏதுமின்றி நீண்டகாலம் தடுத்துவைக்கப்பட்டோர் என்று பல வகையினர் இலங்கையின் சிறைகளில் இருக்கிறார்கள். குறிப்பாக, தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் தான் பயங்கரவாதத் தடைச்சட்டம் தீவிரமாக அமுல்படுத்தப்பட்டது. இதனை உலகின் பல நாடுகளும் எதிர்த்தன. இந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலமாகவே விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என்று இலங்கை அரசு முத்திரை குத்தினார்கள்.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையின் பின்னர் அதிதீவிரமாக விடுதலைப்புலிகள் அழித்தொழிக்கப்பட வேண்டும் என்று இந்தியா முடிவெடுத்தது. உலக நாடுகளுடன் பல ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டு விடுதலைப்புலிகளின் போராட்டம் திட்டமிட்டே மழுங்கடிக்கப்பட்டது. யுத்தம் நிறைவடைந்து 11 வருடங்களை எட்டியுள்ள இந்நிலையில் இன்னமும் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படாமலுள்ளது என்பது தான் இந்த நாட்டில் மேலும் போராட்டங்கள் இன்றும் வலுப்பெறக் காரணங்களாக அமைந்துள்ளன. தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைப் பார்க்கின்றபோது, நல்ல எண்ணம் கருதி அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அவருடைய பேச்சை அங்கீகரித்து அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டமையானது வரவேற்கப்பட்ட ஒரு விடயமாக இருந்தாலும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை வைத்து அல்லது அரசியல் கைதிகளை வைத்து ஒரு விளம்பரத்தைத் தேடுகின்ற அரசியலையே இவர்கள் மேற்கொள்கின்றார்கள் என்கிற விமர்சனங்களும் எழாமலில்லை. ஆனாலும் தமிழ் அரசியல் தலைமைகளும் தமிழ் மக்களும் இவ்விடயம் தொடர்பாக மிகத் தெளிவாக உள்ளார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது. அரசுடன் இணைந்துகொண்டிருக்கின்றதமிழ்அரசியல் கட்சிகள், தாம் வலியுறுத்தியதன் காரணமாகவே தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள் என்கின்ற ஒரு நிலைப்பாட்டினையும் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த அடிப்படையில் விடுதலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளின் பத்து வருடங்களுக்கு மேற்பட்ட இருவரும், ஏனைய 14 பேரும் ஏழு வருடங்களுக்கு உட்பட்டவர்களாகவே உள்ளனர். இன்னமும் அரசியல் கைதிகள் அநுராதபுரம், பூசா, பல்லேகல, போஹம்பர போன்ற சிறைச்சாலைகளில் உள்ளனர். இவர்கள் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் கைது செய்யப்பட்டவர்கள். அதுமட்டுமன்றி மத்திய வங்கி, கொலன்னாவ, கெப்பித்திகொல்லாவ, மொரட்டுவ பஸ் சம்பவ தாக்குதல், கொழும்பு கொட்டகெனா, வெலிக்கந்த, உப்புவெளி, கட்டுநாயக்கா, அநுராதபுரத் தாக்குதல், வவுனியா யோசப் முகாம் தாக்குதல் போன்ற இடங்களில் நடைபெற்ற தாக்குதல்களுக்கு உதவி ஒத்தாசை வழங்கிய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் இன்னமும் வருடக்கணக்கில் சிறைகளில் உள்ளனர். இவர்கள் தொடர்பில் இன்னமும் வழக்கு விசாரணைகள் இடம்பெறாமல் உள்ளது. அதனை நோ டேட் என்றும் ஆங்கிலத்தில் கூறுவார்கள். அதை விடவும் மத்திய வங்கி குண்டுத்தாக்குதலில் லொறியினை கொண்டு சென்று வழங்கிய சாரதிக்குத் தண்டனை 200 வருடங்களாகும். இவர் 2011ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். மத்திய வங்கித் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என கூறப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன், புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டு அம்மான், லொறி சாரதி நவரட்ணம் போன்ற இவர்களுக்கானத் தீர்ப்பு 600 வருடங்களாகும். இந்த மூவருக்கும் தலா 200 வருடங்கள், மொத்தமாக 600 வருடங்கள் என சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இது அப்போது நாட்டில் பேசுபொருளாக மாறியும் இருந்தது. இதில் நவரட்ணம் மட்டுமே கைதாகி சிறையில் அடைக்கப்பட்டார். தற்போது அவர் போஹம்பர சிறையில் இருப்பதாகவும், கண் பார்வைகள் அற்ற நிலையில் மரணமடைந்ததாகவும் கூட செய்திகள் வெளிவந்தன. உண்மை தெரியவில்லை. இது ஒரு மிலேச்சத்தனமான தீர்ப்பு என்றும் கூறப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் மீதான தாக்குதல், அமைச்சர் டக்ளஸ் மீதான தாக்குதல், பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா மீதான தாக்குதல், ஜனக பெரரா, முத்தலிப், ரேலங்கி மற்றும் செல்வராசா, புளொட் மோகன் இதுபோன்ற இன்னும் பல அரசியல் வாதிகளும் விடுதலைப்புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்கானார்கள். பிரேமதாசா மீது குண்டுத்தாக்குதல் நடத்துவதற்கு ஒத்தாசை வழங்கிய குடத்தனை ரவி கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார். கோட்டபாய ராஜபக்ஷ மீது தாக்குதல் நடத்திய ஆரூரன் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது தாக்குதல் நடத்தியவர்கள் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை. மேற்கூறப்பட்ட சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்திலேயே இன்னமும் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் ஏன் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை.

இதைவிடவும் ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த 110 போராளிகளுள் தளபதிகள், விடுதலைப்புலிகளின் கட்டமைப்புக்களுக்குப் பொறுப்பானவர்கள், ஆய்வுப்பிரிவினர் என 52கட்டமைப்புக்களுக்குப்பொறுப்பானவர்கள் என்ன ஆனார்கள் என்பது இதுவரை தெரியாது. பொலன்னறுவ, வெலிக்கந்த, திருகோணமலை கடற்படைத்தளம், மிகிந்தலை போன்ற பகுதிகளில் ரகசியமாக இவர்கள் இன்னமும் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள் என செய்திகள் வெளிவந்திருக்கின்றன. ஒரு சிலரின் கருத்துக்களின் படி இவர்கள் அனைவரும் சுட்டுக்கொல்லப்பட்டுவிட்டார்கள் என்கிற கருத்தும் நிலவுகிறது. ஆனால் வெள்ளைக்கொடியுடன் சரணடைந்தவர்களுக்கு அரசு பதில் கூறவேண்டும். அவர்களை கைது செய்து கொண்டுசெல்கின்ற ஆதாரங்களும் உள்ளது. அதிலும் 35 போராளிகளை கிடங்கு ஒன்றில் புதைத்த சம்பவமும் பதிவாகியுள்ளது. புலிகளின் குரல் செய்தி வாசிப்பாளர் இசைப்பிரியா மற்றும் விடுதலைப்புலிகள் அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ் இருவரும் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்ட ஆதாரங்களும் இருக்கின்றன.

சரி. நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும் என்று வைத்துக்கொண்டாலும் வெள்ளைக்கொடியுடன் சரணடைந்தவர்கள், மேற்படி தாக்குதல்களுடன் தொடர்புடைய பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சிறைகளில் வாடும் இவர்களை இன்னமும் அரசு ஏன் விடுதலை செய்யவில்லை. இவ்வாறான நிலையில் தான் தற்போது விடுதலை செய்யப்பட்டிருக்கும் 16 அரசியல் கைதிகள் என்று கூறுவது ஒரு பெயரளவில் மாத்திரம் என்றே கூறமுடியும். முக்கியமான தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் அல்லது ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் பங்கெடுத்தவர்கள், சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டவர்கள் என்ன ஆனார்கள் என்பது இதுவரையில் தெரியவில்லை. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் பலர் மர்மமான முறையில் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். இந்த கொலைகளை அரசாங்கம் ஒட்டுக்குழுக்களைப் பயன்படுத்தி செய்து முடித்தார்கள். ஆக மொத்தத்தில் இவர்கள் ஏன் கொலை செய்யப்பட்டார்கள். எதற்காக கொலை செய்யப்பட்டார்கள் என்கிற கேள்விக்கு அரசு பதில் கூறவேண்டும். தமிழர்களை தமிழர்களே அழித்தொழிக்கும் நடவடிக்கையாக கருணா - பிள்ளையான் பிளவை உருவாக்கி, ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் வடகிழக்கில் பலியாகினர்.

ஆகவே இந்த அரசாங்கமானது விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என முத்திரை குத்தியதுடன், தமிழ் மக்களையும் இணைத்து முத்திரை குத்தியது மிகத் தவறான விடயம். பயங்கரவாதிகளை அழிக்கின்றோம் என தமிழ் மக்களையும் அழித்தொழித்தது ஒரு மடத்தனமான விடயம். தற்போது அரசு எந்த பயங்கரவாதிகளைக் காப்பாற்ற நினைக்கிறது. தலதா மாளிகைத் தாக்குதலை திட்டமிட்டு நடத்தியவர்கள் இன்று பொது மன்னிப்புடன் நடமாடித் திரிகின்றார்கள். நாட்டின் அடுத்த பிரதமராக அமைச்சர் நாமல் ராஜபக்ஷவைக் கொண்டுவருவதற்கான பின்னணிகள் தான் தற்போது இடம்பெறுகிறது என்று கூறப்படுகிறது. பாரத லக்ஸமன் கொலைக்கு தண்டனை வழங்கப்பட்ட துமிந்த சில்வா ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது. கொலைக் குற்றம் தொடர்பில் வெலிக்கட, மஹர, நீர்கொழும்பு போன்ற சிறைகளில் 250க்கும் மேற்பட்ட மரண தண்டனைக் கைதிகள் இருக்கிறார்கள். இவர்களுக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டிருக்கவேண்டும். இவர்கள் 35 வருடங்களுக்கும் மேற்பட்டவர்கள். இவர்கள் இன்று போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர். பல வருடங்களாக சிறைகளில் வாடும் கைதிகளின் மனநிலை இதனால் பாதிக்கப்படும் என்பதனை அரசு புரிந்துகொள்ளவேண்டும்.

தமிழ் மக்களது பிரச்சினைகளாக பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும், சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணி மற்றும் பொலிஸ் அதிகாரம், வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகம் இவற்றை வைத்தே தற்போதைய அரசாங்கம் அரசியலை மேற்கொள்கிறது. பௌத்த துறவிகள் இந்த நாட்டை ஒரு பௌத்த நாடாக மாற்றியமைக்கவேண்டும் என்பதில் குறியாக இருப்பவர்கள். அதுபோன்று வடகிழக்கிலும் பௌத்தத்தையே நிலைநாட்டவேண்டும். அவ்வாறு செயற்படுகின்ற அரசையே நாம் ஆதரிப்போம் என்கிற தோரணையில் செயற்படுகின்றவர்கள் பௌத்த தேரர்கள். பயங்கரவாதத் தடைச்சட்டம் இந்த நாட்டில் இருந்து எடுக்கப்படுமாகவிருந்தால் கிட்டத்தட்ட இந்நாட்டில் முக்கால்வாசிப் பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் என்பது விடுதலைப்புலிகளது தமிழினத்திற்கான நிகழ்ச்சிநிரலை அரசிற்கும் உலகிற்கும் வெளிப்படுத்துவது. ஆனால் இன்று இவர்களது நிகழ்ச்சி நிரல் தமது அரசியலை முன்னெடுப்பதும் தமது கட்சியை வளர்ப்பதுமாக மாறியுள்ளது. புலம்பெயர்ந்தவர்களது அரசியலை இந்நாட்டில் முன்னெடுக்க எந்த தமிழ்க் கட்சிகளும் விரும்பவில்லை. கடந்த தேர்தல்களிலும் கூட விடுதலைப்புலிகள் சார்பாக போட்டியிட்டவர்களைக் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளவில்லை.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தமிழினத்தின் ஆதரவின்றி தம்மால் தனித்து வெற்றிபெற்று ஆட்சியமைக்க முடியும் என்ற திட்டத்தில் அரசு இன்று வெற்றியும் கண்டுள்ளது. அதுமட்டுமன்றி ராஜபக்ஷ பரம்பரையின் அடுத்த வாரிசாக அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ அவர்களை பிரதமராக நியமித்து, அதன் ஊடாக தொடர்ந்தும் ராஜபக்ஷ பரம்பரை தான் இந்த நாட்டை ஆட்சிசெய்யவேண்டும் என்கிற நோக்கிலான தீவிரமானத் திட்டம் தான் இந்த அரசியல் கைதிகளின் விடுதலை என்றே பார்க்கப்படுகின்றது. அதற்கு பொசன் தினத்தினமும் பயன்படுத்தப்பட்டுள்ளது. நாட்டினுடைய ஜனாதிபதியும், பிரதமரும் இதுவரை பாராளுமன்றில் வலியுறுத்தாக ஒரு விடயத்தை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ செயற்படுத்திக் காட்டிவிட்டதாக இன்று பேசப்படுகிறது. இலங்கையினது அரசியலில் 30 ஆண்டு கால வரலாற்றில் கையாளப்படாத மற்றுமொரு ராஜதந்திர நகர்வுகள் இப்போது நகர்த்தப்படுகிறது. இதன் மூலமாக புலம்பெயர்ந்தவர்களை உள்வாங்க முடியும். தமிழ் மக்கள் மத்தியில் வரவேற்பையும் பெற்றுக்கொள்ள முடியும். அதேநேரம் தமது திட்டங்களையும் இலகுவாக மேற்கொள்ள முடியும். இதனை தமிழ் அரசியல் தலைமைகள் நன்கு புரிந்துகொண்டு தமது அரசியலை நகர்த்திச் செல்வது காலத்தின் கட்டாயமாகும்.



**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## சீனாவின் பிடிக்குள் இலங்கையரசு கொரோனா வைரசும் ஒரு காரணம்

உலகளாவிய ரீதியில் சீனா அரசாங்கதினால் பரப்பப்பட்டுள்ளதுஎன்றுகூறப்படும்கொரோனா வைரசின் தாக்கம் பற்றி அனைவரும் அறிந்ததே. இதனால் வல்லரசு நாடுகளும் செய்வதறியாது திணறும் நிலைக்கு உள்ளாகியிருப்பதுடன், பொருளாதார ரீதியாக வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனது தாக்கம் இலங்கையிலும் உணரப்பட்டுள்ளது. நாடுகளுக்கிடையிலான விமானசேவைகள், சுற்றாலாப் பயணிகள் வருகையில் தடை என அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்ட திடீர் வீழ்ச்சியானது, ஏற்கனவே அரசுகளின் பொறுப்பற்ற செயற்பாடுகளால் இலங்கையின் பொருளா தார வீழ்ச்சி பாதிக்கப்பட்டிருந்த நிலையில், கொரோன வைரசின் தாக்கம் மேலும் இலங்கையைப் பாதித்துக்கொண்டிருக்கிறது. முதலாம் அலையில் கொரோனா வைரசைக் கட்டுப்பாட்டுக்குள்வைத்திருந்தஇலங்கையால் இரண்டு, மூன்றாம் அலைகள் என தாக்க ஆரம்பித்த வேளையில் கொவிட் செயலணி இலங்கையில் செயலிழந்துபோயுள்ளதாகக் கூறுமளவிற்கு நிலைமைகள் இங்கு மோசமடைந்துள்ளன. மூன்றாம் அலையில் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்த வண்ணம் உள்ளதால், நாட்டில் தொடர்ச்சியாக ஒரு மாத காலத்திற்கு மேல் பயணத்தடை அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன், மாவட்டங்களில் தடுப்பூசிகளை செலுத்தும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனினும் மக்கள் பொருளாதார ரீதியாகப் பாதிக்குப்பட்டுள்ளனர்.வேலைவாய்ப்புக்களை முற்றாக இழந்துள்ள நிலையில், பசியால் அவதியுறும் நிலை தலை தூக்கியுள்ளது. தற்போது டெல்டா, அல்பா என கொரோனாத் திரிபுகள் இலங்கையில் வேகமாகப் பரவ ஆரம்பித்துள்ளதை அறிய முடிகின்றது. உலக சுகாதார நிறுவனமும், சுகாதாரத் திணைக்களமும், வைத்தியர்கள் சங்கமும் டெல்டா வகை வைரஸ் தொடர்பில் மிகுந்த அவதானமாக இருக்குமாறு மக்களை அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில் தான் தற்போது ஆட்சியிலிருக்கும் அரசு சீனச்சார்பு நிலையில் செயற்படுவதாலும், சீனாவின் பாரியமுதலீட்டில்இலங்கையில்அபிவிருத்திப் பணிகள் இடம்பெறுவதாலும், கடன்களைப் பெற்றுக்கொண்டுள்ளதாலும் இலங்கையின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த இடங்களைக் குறிவைத்து சீனா ஆட்டம் இலங்கையில் ஆரம்பமாகியுள்ளதுடன், இந்தியா முந்திக்கொண்டு இலங்கைக்கு உடனடியாக கொரோனா தடுப்பூசிகளை வழங்க முன்வந்தது. சீனாவின் இலங்கை மீதான ஆதிக்கத்தை அமெரிக்கா மற்றும் இந்தியா விரும்பவில்லை. ஆளில்லா விமானம் மூலமாக சீனா இலங்கைக் கடற்பரப்புக்களை கண்காணிக்கிறது எனவும் அது தமது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்கிற கதைகளை எல்லாம் தற்போது கட்டவீழ்த்துவிடவும், திடீரென இந்தியக் கப்பல் ஒன்றை இலங்கைக்கு அனுப்பியும் வைத்துள்ளது. அக்கப்பல் அண்மையில் இலங்கையில் தீப்பற்றி எரிந்த எக்ஸ் பிரஸ் பேர்ள் என்கிற கப்பல் தொடர்பான பாதிப்புக்கள் குறித்த பணியை இலங்கை கேட்டுக்கொண்டதற்கு இணக்கச் செய்யும் எனவும் கூறப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுக நகரத்தை சீனா தனது முதலீட்டில் அமைத்து வருவது அனைவருக்கும் தெரிந்ததே. இதன் மூலம் இலங்கையின் மிக முக்கியமான வர்த்தகத் துறைமுகமான கொழும்பு சீனா வசமாகியுள்ளது என்கிற எதிர்ப்பு தென்னிலங்கை அரசியல்வாதிகளிடத்தில் எழுந்துள்ளது. சீனாவிற்கு தற்போதைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ நாட்டைத் தாரைவார்த்துக் கொடுத்துள்ளார் என்கிற குற்றச்சாட்டுக்கள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. சீனர்களின் நடமாட்டம் மெதுமெதுவாக இலங்கையில் அதிகரிக்கப்படுகிறது. இன்று பல்வேறு துறைகளில் சீனர்கள் இங்கு கடமையாற்றுகின்றனர். பாதைகள், பாலங்கள், கட்டடங்கள் அமைத்தல் என சீனாவின் செல்லப்பிள்ளையாக இலங்கை மாறியுள்ளது. சீனாவின் கைப்பொம்மைகளாக ஆட்சியாளர்கள் மாறவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**153**

காப்பளிக்கின்ற குழு பதுங்கித் தாக்குதல் நிலையெடுத்து, எதிரி வரக்கூடிய பாதை களை அடைத்து முதலாவது குழுவின் நடவடிக்கைக்கு ஆதரவளிக்கின்றது. பிற குழுக்கள் பின்வாங்கிச் செல்வதற்கும் ஆதரவளிக்கின்றது.

தகர்ப்பாளர்கள் குழு களஞ்சியங்கள் அழிப்பை (வெடிகுண்டுத் தகர்ப்பு, எரிப்பு) மேற்கொள்கின்றது.

எரிபொருள், உராய்வுநீக்கிப் பொருட்களைக் கொண்டுள்ள சேமிப்புக்களை (கொள்கலன்களை) அழிப்பதற்கு இக்குழு பின்வரும் முறைகளைக் கையாள்கின்றது. எரி பொருள், உராய்வுநீக்கிப் பொருட்களைக் கொண்டுள்ள நிலக்கீழ் கொள்கலனின் கழுத்துப் பகுதியில் வெடிகுண்டைப் பொருத்துதல், நிலத்திற்கு மேலிருக்கின்ற கொள்கலனின் கீழ் (பக்கவாட்டில்) வெடிகுண்டைப் பொருத்துதல், கொள்கலனிற்கு ராங்கியெதிர்ப்பு ஏறிகணைச் செலுத்தியால் அல்லது சுரிசுடுகலனால் சுடுதல், கொள்கலனைத் தீயிடல் போன்றனவாகும். இக்குழுவின் செயற்பாடுகள் கவனமாகத் தயார்ப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், எரிபொருட்களைக் கொண்டுள்ள கொள்கலன்களைத் தகர்ப்பதும் எரிப்பதும் கெரில்லாக்களுக்கும் குறித்தளவு ஆபத்தை ஏற்படுத்தலாம்.

**விமானத்தளத்தைத் தாக்குதல்**

எதிரியின் வான்படை - கெரில்லாக்களின் மிகக் கொடூரமாக எதிரியாகும். இவற்றை அழிப்பது கெரில்லா வீரர்களின் மனவலிமையை அதிகரிக்கின்றது.

எதிரியின் விமானத் தளத்திற்கெதிரான நடவடிக்கைக்காகவும் கெரில்லாக்கள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றனர்.

முதலாவது குழு - தாக்குதல் தொடுத்தல்:இக்குழுகாவலாளர்களை அழிக்கின்றதுடன், தொடர்புகளையும் ஒளிபாய்ச்சிகளையும் அழிக்கின்றது.

இரண்டாவது குழு - இதனது பணி தகர்ப்பின் மூலமும் எரியூட்டலின் மூலமும் விமானங்கள், உலங்குவானூர்திகள் போன்றவற்றை அழித்தலும் அங்குள்ள வழிகாட்டல் கருவிகள், நிலைகள், வானொலி நிலையங்கள் போன்றவற்றை அழித்தலுமாகும். அத்துடன் களஞ்சியங்கள், எரி பொருள், உராய்வுநீக்கி கொள்கலன்கள், திருத்தச்சாலைகள் ஆகியவற்றையும் அழித்தல், பிரதான போர்க்கருவி - வெடிமருந்துக் குண்டுகளாகும்.

மூன்றாவது குழு - காப்பளித்தல் : இதனது பணி முதலிரண்டு குழுக்களினதும் செயற்பாட்டிற்கு ஆதரவளித்தலும் எதிரியின் சேமப்படையின் வரவு சாத்தியமான பாதைகளை அடைப்பதுமாகும். பதுங்கித் தாக்குதல், பாலங்களைத் தகர்த்தல், வீதிகளில் குழிகள்



தோண்டுதல் போன்றவற்றை மேற்கொண்டு இக்குழு செயற்படுகின்றது. ஏனைய படைகள் பின்வாங்குவதற்கு இக்குழு காப்பளிக்கின்றது.

ஆயுதங்களையும் வெடி பொருட்களையும் களஞ்சியப்படுத்தும் வழிவகைகள் அடுத்த கட்டப் பயன்பாட்டிற்காக ஆயுதங்களையும் வெடிபொருட்களையும் குறுகிய காலத்திற்குக் களஞ்சியப்படுத்த ஒழுங்குசெய்யவேண்டிய நிலை சில வேளைகளில் ஏற்படுகின்றது. இதன்போது பிரதானமானது யாதெனில், ஆயுதங்கள் துரப்பிடிக்காமல் இருப்பதும் அவை பதுக்கி வைக்கப்பட்டுள்ள இடம் எதிரிக்குத் தெரியாமலிருப்பதுமாகும்.

களஞ்சியப்படுத்துவதற்கான சிறந்த வழி - ஆயதங்களை நிலத்தில் புதைத்தலாகும்.

இதற்காக ஆயுதத்தின் சகல உலோகப் பாகங்களுக்கும் எண்ணெய் இடப்படுகின்றதுடன் சுடுகலனின் குழலுக்கு பரவீன் மெழுகும் ஊற்றப்படுகின்றது. ஆயுதத்தின் ஒவ்வொரு பாகங்களும் எண்ணெய்ச் சீலையால் சுற்றப்படுகின்றது. அவற்றின் சில குழல்கள் ஒன்றாகச் சுற்றப்பட்டுப் பெரிய பையொன்றினுள் இடப்பட்டு, கயிற்றால் இறுக்கமாகக் கட்டப்பட்டு, மரத்தாலான பெட்டிகளுக்குள் வைக்கப்படுகின்றன. பெட்டியிலுள்ள சிறிய துவாரங்கள், துளைகள் போன்றன மெழுகால் அல்லது பரவீன் மெழுகால் அடைக்கப்படுகின்றன. மரப்பெட்டி அலுமினியத்தாலான மெல்லிய தகட்டால் சுற்றப்பட்டு, நிலத்தினுள் புதைக்கப்படுகின்றது. பெட்டிகள் புதைக்கப்படுகின்ற இடம் உலர்ந்த தரையாகஇருக்கவேண்டும்.சீமெந்துத் தரையைக் கொண்ட கட்டடங்கள், கட்டுமானத் தளங்களுக்குக் கீழ் புதைப்பது மிகச் சிறந்ததாகும்.

ஆயுதங்கள் ஒவ்வொரு மூன்று மாதத்திற்கு ஒரு தடைவ பரிசோதிக்கப்படவேண்டும். பின்னர் எண்ணெயிடப்பட்டு மீளப் புதைக்கப்படவேண்டும்.

வெடிபொருட்கள் (அவற்றின் வகைகளைப் பொறுத்து) ஒன்றிலிருந்து ஒன்று தனித்தனியாக களஞ்சியப்படுத்தப்படுகின்றது. வெளிச்ச, சமிக்கைக் குண்டுகள் போன்றன கடதாசியால் சுற்றப்பட்டு, மரத்தாலான பெட்டிக்குள் வைக்கப்பட்டு, அதனுள் உலர்ந்த மரத்தூள் தூவப்படுகின்றது. மரத்தூள் ஒவ்வொரு மாதமும் மாற்றப்படவேண்டும்.. ஏனெனில் இவ்வெடிபொருட்கள் வேகமாக ஈரப்பதனைப் பற்றிக்கொள்கின்றன.

ஆயுதங்கள்உலோகப்பகுதிகளிலுள்ள துருவை நீக்குவதற்கு **10%** கரை சலைக் கொண்ட குளோரின் அமிலத்தால் கழுவி, அதன் பின்னர் மண்ணெண்ணெயால் அல்லது பெற்றோலால் கழுவவேண்டும்.

முக்கள் மத்தியில் மறைந்துகொள்ளல் சிலவேளைகளில் கெரில்லாக்கள் நகரங்களிலும் கிராமங்களிலும் வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். ஆகவேதான், பாதுகாப்பான வாழ்க்கைக்கு வழிசெய்யவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதற்காகக் கெரில்லாக்களின் நண்பர்களும் இரகசியச் சந்திப்பு வீடுகளும் பயன்படுத்தப்படுகின்றன.

கெரில்லாக்கள் மறைந்துகொள்ளக்கூடிய ஒவ்வொரு இடமும் நம்பகரமானதாகவும் குறியீட்டுச் சைகைகளைத் தெரியப்படுத்தக்கூடியதாகவும் இருப்பது மிக முக்கியமாகும். இந்தச் சைகைகள் இலகுவானதாகவும் நம்பகரமானதாகவும் எதிரியின் கண்ணுக்கு முன்னால் தெரியப்படுத்தப்படுவனவாக இல்லாமலும் இருக்கவேண்டும். எதிரி மக்கள் வாழ்விடத்திற்கு வரும்போது, இச்சைகைகளை வேகமாகவும் வெளித்தெரியாமலும் பயன்படுத்த வேண்டும். எடுத்துக்காட்டாக, பூக்களை வைத்தல் அல்லது அகற்றல், மரத்தின் கிளையை ஒடித்தல், வைக்கல் கதிர்க்கட்டை அறுத்தல் போன்றன.

குழு உறுப்பினர்கள் மக்கள் வாழ்விடத்தில் கூடுவதற்காக நம்பகரமான இடம் தெரிவுசெய்யப்படுகின்றது. ஆனால், இதன்போது கெரில்லாக்கள் எதிரியின் சாத்தியமான தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கத்தயாராகஇருக்கவேண்டும். கெரில்லாக்கள் கூடுகின்ற வீடு ஏனையவற்றைவிட எந்தவகையிலும் வித்தியாசமானதாக இருக்கக்கூடாது. இவ்வாறான வீட்டில் கெரில்லாக்கள் இருக்கின்றபோது, கதவு சைகை முறையில் தட்டப்பட்டாலும் அவர்கள் தூட்டுத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கத்தயாராகஇருக்கவேண்டும். ஏனெனில், அது எதிரியின் பொறியா கவும் இருக்கலாம்.

**நெற்றிபொறியன்**
**தொடர்வான்...**

# ரணிலின் பாராளுமன்ற மீள் வருகை, நடக்கப்போவது என்ன?

ஐக்கிய தேசியக் கட்சியின் இளைஞர் முன்னணி ஊடாக அரசியலில் தனது பயணத்தை ஆரம்பித்த ரணில் விக்கிரமசிங்க அவர்கள் 1970 இல் களனி தொகுதியின் அமைப்பாளராக நியமனம் பெற்றார். அதன்பின்னர் பியகம தொகுதி அவரிடம் கையளிக்கப்பட்டது. 1977 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் பியகம தொகுதியில் போட்டியிட்டு அதில் 22,045 வாக்குகளைப்பெற்று வெற்றி பெற்றார். தனது 28ஆவது வயதில் பிரதி வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டார். 1977 ஒக்டோபர் 05 ஆம் திகதி அமைச்சரவைக்கு உள்வாங்கப்பட்டு இளைஞர் விவகார மற்றும் தொழில் அமைச்சு பதவி ஒப்படைக்கப்பட்டது.

1980 பெப்ரவரி 14 கல்வி அமைச்சு பதவி கையளிக்கப்பட்டது. தொடர்ந்து 9 ஆண்டுகள் அப்பதவியில் நீடித்த அவர், கல்வித்துறையில் நவீன யுகத்துக்கேற்ப பல மறுசீரமைப்புகளை மேற்கொண்டார்.

1993 மே 17 ஆம் திகதி இலங்கை சோசலிசக் குடியரசின் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பதவியேற்றார். 1994 இல் ஐ.தே.கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டார். கட்சியிலிருந்து வெளியேறி மீண்டும் தாய்வீடு திரும்பிய காமினி திஸாநாயக்க பிரதான எதிர்க்கட்சி தலைவரானார். எனினும் காமினி திஸாநாயக்க கொலை செய்யப்பட்டதன் பின்னர் எதிர்க்கட்சி தலைவராகவும் ரணில் செயற்பட்டார்.

1999 இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க முதன்முறையாக போட்டியிட்டார். அதில் சந்திரிகாவே வெற்றிபெற்றார். 2000 ஒக்டோபர் 10 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் சந்திரிகா தலைமையிலான மக்கள் கூட்டணி வெற்றி பெற்றது. ஓராண்டுக்குள் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் 2001 டிசம்பர் 05 ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட்டது. அதில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. 2001 டிசம்பர் 09 ஆம் திகதி ரணில் பிரதமரானார். 2004 ஏப்ரல் 2 ஆம் திகதிவரை அப் பதவியில் நீடித்தார்.

நாடாளுமன்றத்தில் ஆயுட்காலம் முடிவடைவதற்குள்ளேயே நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி சந்திரிக்கா நாடாளுமன்றத்தைக் கலைத்து 2004 ஏப்ரல் 2 ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட்டது. ஐ.தே.க. ஆட்சி கவிழ்ந்தது. கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க 3 இலட்சத்து 29 ஆயிரத்து 524 விருப்பு வாக்குகளைப் பெற்றார்.

2005 நவம்பர் 17 ஆம் திகதி நடைபெற்ற ஐந்தாவது ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் ரணில் விக்கிரமசிங்கவே போட்டியிட்டார். 47 இலட்சத்து 6 ஆயிரத்து 366 வாக்குகளைப் பெற்றார். இத்தேர்தலில் மஹிந்தவே வெற்றி பெற்றார்.

2010 ஜனவரி 26 ஆம் திகதி ஆறாவது ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் மஹிந்த களமிறக்கினார். அவருக்கு எதிராக எதிரக்கட்சிகளின் சார்பில் இறுதிப்போரை வழிநடத்திய இராணுவத்தளபதி சரத் பொன்சேக்கா களமிறக்கப்பட்டார். ஜனாதிபதி தேர்தல் வரலாற்றில் முதல் முறையாக ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் களமிறங்கவில்லை என்பதுடன், யானை சின்னத்துக்கு பதிலாக அன்னப்பறவை சின்னமே முன்னிலைப்படுத்தப்பட்டது. இத்தேர்தலில் மஹிந்தவே வெற்றி பெற்றார்.

2010 ஏப்ரல் 4 ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் ரணிலின் தலைமைத்துவத்தின் கீழ் யானை சின்னத்திலேயே ஐக்கிய தேசியக்கட்சி போட்டியிட்டது. தேர்தலில் தோல்வி. கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க 2 இலட்சத்து 32 ஆயிரத்து 957 வாக்குகளைப் பெற்றார்.

2015 ஜனவரி 8 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலிலும் விட்டுக்கொடுப்புகளை செய்யவேண்டிய நிலை ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏற்பட்டது. மஹிந்த அரசிலிருந்து வெளியேறிய சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு பொதுவேட்பாளராக களமிறங்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

மைத்திரி ஜனாதிபதி, ரணில் பிரதமர் என்ற தொனியிலேயே பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டன. 62 இலட்சத்து 17 ஆயிரத்து 162 வாக்குகளைப் பெற்று மைத்திரிவெற்றிபெற்றார். மஹிந்தவின்10 ஆண்டுகாலசாம்ராஜ்யமும்சரிந்தது. 2015 ஜனவரி 9 ஆம் திகதி பிரதமராக ரணில் பதவியேற்றார். இதனால், மஹிந்தவின் அமைச்சரவையும் கலைந்தது. 2015 ஆகஸ்ட் நடைபெற்ற பொதுத்தேர்தலிலும் ஐக்கிய தேசியக்கட்சி 106 ஆசனங்களைக் கைப்பற்றி அறுதிப்பெரும்பான்மை இல்லாவிட்டாலும் தேசிய அரசமைத்து ஆட்சியை தக்கவைத்துக்கொண்டது.

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க 5 இலட்சத்து 566 வாக்குகளைப் பெற்று மீண்டும் வரலாற்று வெற்றியை பதிவு செய்தார்.

2018 ஒக்டோபர் மாதம் ஆட்சிகவிழ்ப்பு சூழ்ச்சி மூலம் மஹிந்தவை, ஜனாதிபதி மைத்திரி பிரதமராக்கினார். எனினும், நீதிமன்றத்தை நாடி சவால்களையெல்லாம் சமாளித்து மீண்டும் பிரதமரானார் ரணில். நம்பிக்கையில்லாப் பிரேரணைகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உதவியுடன் மணக்வ்வ செய்தார்.

2019 நவம்பர் 16 ஆம் திகதி நடைபெற்ற இலங்கையின் 8 ஆவது ஜனாதிபதி தேர்தலில் களமிறங்க வேண்டும் என்பதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறியாகவே இருந்தார். எனினும், கட்சிக்குள் எதிர்ப்புகள் வலுத்ததால், பங்காளிகள் விடாப்பிடியாக நின்றதாலும், நாட்டு மக்கள் சஜித்தை கோரியதாலும் மூன்றாவது முறையும் தியாகம் செய்யவேண்டிய நிலைக்கு அவர் தள்ளப்பட்டார்.

எனினும் முழு மனதுடன் உடனடியாக சஜித்தை வேட்பாளராக நிறுத்த ரணில் அவர்கள் விரும்பில்லை. பல இழுபறிகள். பேச்சுவார்த்தைகள் என கட்சிக்குள் தொடர்ந்தது. விடாப்பிடியாக இருந்தார் ரணில். அதன் பின்னர் ஐக்கிய தேசியக்கட்சி இரண்டாக உடைந்தது. சஜித் தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி



உயதமானது. 2020 பொதுத்தேர்தலில் இரு அணிகளும் தனியாக போட்டியிட்டன. ஐக்கிய மக்கள் சக்தி 54 ஆசனங்களைக் கைப்பற்றியது. ஐக்கிய தேசியக்கட்சிக்கு நாடு முழுவதும் 2.15% வாக்குகளே கிடைக்கப்பெற்றன. தேசியப்பட்டியல் ஊடாக வாய்ப்பு கிடைத்தது. அதிலும் பல இழுபறிகளுக்கு மத்தியில் ஒரு வருடத்திற்குப் பின்னர் தற்போதுதான் ரணில் அவர்கள் ஒரு தேசியப் பட்டியலைப் பயன்படுத்தி கட்சியின் தலைவரான தானே பாராளுமன்றம் சென்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

**நாடாளுமன்ற அரசியலுக்கு வந்த பிறகு ரணில் எந்தவொரு பொதுத்தேர்தலிலும் தோற்றதில்லை. 42 வருடங்களாக தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்து சாதனையும் படைத்துள்ளார். அரசியலில் மிஸ்டர் க்ளீன் என்ற நாமம் ரணிலுக்கு இருந்து வந்தது. அரசியலில் குள்ளநரியாகவே அவர் பார்க்கப்படுகின்றார்.** 42 ஆசனங்களை வைத்துக்கொண்டு ஆட்சியைப் பிடித்ததுடன், அரசமைப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்தினார். எனவேதான் தற்போது அவர் நாடாளுமன்றம்வருவதுகூட சிலரை கிலிகொள்ள வைத்துள்ளது. அவர் தான் போட்டியிட்ட எந்தவொரு ஜனாதிபதி தேர்தலிலும் வெற்றி பெறவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினராக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தனித்து பாராளுமன்றம் சென்ற அன்றைய தினம், அவர் பாராளுமன்றில் ஆற்றிய உரையும் காரசாரமாக இருந்தது. அந்த உரையில், **அரசியலமைப்பின் பிரகாரம் நாட்டை அமைச்சரவையும், பாராளுமன்றமுமே நிர்வாகம் செய்ய வேண்டும். அதிகாரங்கள் இராணுவத்தினரிடம் வழங்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாதெனவும், மீண்டும் இந்த பாராளுமன்றத்திற்கு வந்தமை தொடர்பாக நான் மகிழ்ச்சியடைகிறேன்.** இது தொடர்பாக அனைத்துத் தரப்பினருக்கும் எனது நன்றியை கூறிக்கொள்கின்றேன். இந்த சபையில் அமைச்சர் பந்துல குணவர்தனவின் உரையின் போது ஒரு விடயத்தை அவதானித்தேன். இந்த அரசாங்கம் வரிச் சலுகைகளை வழங்கியுள்ளது. செல்வந்தர்களுக்கு வரிச் சலுகைகளை வழங்கி வறியவர்களை பசியில் இட்டுள்ளனர்.

இப்போது கொவிட் முக்கிய விடயமாக உள்ளது. இது தொடர்பான செயலணி முற்றாக தோல்வியடைந்தது. எமது அரசியலமைப்பிற்கமைய இதன் அதிகாரங்கள் அமைச்சரவைக்கும் பாராளுமன்றத்திற்குமே இருக்க வேண்டும். ஏன் இதனை அமைச்சரவைக்கு வழங்க முடியாது. **இப்போது இராணுவ அதிகாரத்தின் மூலம் நாட்டை நிர்வகிக்கின்றனர். இராணுவத்தினருக்கு அந்த அதிகாரங்களை ஒப்படைப்பதாக நாங்கள் குற்றம் சாட்டுகின்றோம் என வந்த முதல் நாளே அரச தரப்பை கேள்விகளால் திணறடித்தார்.** ஆவர் பாராளுமன்றில் உரையாற்ற எழுந்தால் யாருமே வாய்திறக்க இயலாத அளவிற்கு அவரது பேச்சு இருக்கும். அரசியலில் அனைத்து நெளிவுசுழிவுகளையும் அறிந்த ஒருவராகவும் அறியப்படும் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் பாராளுமன்ற பிரவேசம் எதிர்காலத்தில் நாட்டின் அரசியலில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என்றே அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

தற்போதைய ஆட்சியாளர்களினால் பௌத்த துறவிகளும், நாட்டின் மூவின மக்களும்அதிருப்திஅடைந்துவரும்நிலை உருவாகியுள்ளது. கொரோனாவைக் காரணங்காட்டி நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள், எரிபொருள், உரத் தட்டுப்பாடு என மக்கள் பொருளாதார ரீதியாக அல்லல்படும் சூழல் அதிகரித்திருப்பதும், இராணுவத் தலையீடுகளும் மக்களை சினங்கொள்ள வைத்திருக்கிறது. அரசினது கொவிட் செயலணி குறித்து விமர்சனங்களும் எழ ஆரம்பித்துள்ளன.

அமெரிக்காவுக்கு பிடித்தமான ஒருவராக அறியப்படுபவர் தான் ரணில் அவர்கள். அமைதியாக, நன்கு திட்டமிட்டே அவரது பாராளுமன்ற பிரவேசமும் அமைந்துள்ளது. கடந்த நல்லாட்சியில் பிரதமராக இருந்தபோது தன்னுடன் கூட்டில் இருந்தவர்கள். மிக நெருக்கமாகப் பழகிய தனது கட்சிக்காரர்கள் எனப் பலரும் இன்று அவருடன் பாராளுமன்றில் இருக்கும் நிலையில், மீண்டும் உடைந்த ஐக்கிய தேசியக் கட்சியை மீட்டெடுத்து, சஜித் அவர்களையும் தன்னுடன் இணைத்துக்கொண்டு, கடந்த காலங்களைப் போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லீம் கட்சிகள், மலையகம்சார்ந்ததமிழ்அரசியல்கட்சிகள் என அனைவரையும் ஒரு கூட்டணியாக அமைத்து செயற்படும் சூழலை மீண்டும் ஏற்படுத்தி, பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியமைப்பதை நோக்காகக் கொண்டே அவரது புதிய பாராளுமன்ற வருகையும் அமைந்திருக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை எனலாம்.

**சசிகரன்**

# சிங்களத் தலைமைகள் இனப்படுகொலைகளை பல்வேறு வடிவங்களில் முன்னெடுத்தன



இலங்கைத்தீவின் வரலாறு அரசியலமைப்புச் சட்டத்தின் ஊடாக பௌத்த மதத்துக்கு முதலிடம், புத்தசாசன அமைச்சினூடாகப் பஞ்சசீலக் கொள்கைகளுக்குப் பிரத்தியேக இடமும் கொடுக்கப்படுவதாகக் கூறப்படுகின்ற போதிலும் அது நடைமுறையில் பெருமளவுக்கு படுகொலைகளால் அறியப்படும் வரலாறாகவே இருந்து வருகிறது. இந்ததவிர்க்கமுடியாததும் சகிக்க முடியாததுமான துர்ப்பாக்கியமான நிலைக்கான அத்திவாரம், இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்பான காலத்திலேயே இடப்பட்டு இருக்கின்றது.

அப்போதிலிருந்தே இந்த நாட்டை ஆளத் தலைப்பட்ட சிங்களத் தலைவர்கள்.சிங்கள பௌத்த தேசியம் கொண்ட ஒரு நாடாகவே இலங்கையை வைத்திருக்க முயன்றிருக்கின்றார்கள். அதனை நடை முறையில் பேணுவதற்கு சிறுபான்மை இனங்களைஅச்சுறுத்திவைத்திருத்தல்என்ற உத்தியைக் கையிலெடுத்திருக்கின்றார்கள். இது 1883இல் ஆரம்பித்தது. வர்த்தகத்தில் ஈடுபட்ட மலையாளிகளுக்கு எதிராக இந்த நிலைப்பாட்டை அநாகரிக தர்மபாலா, ஏ.ஈ.குணசிங்கா போன்ற சிங்கள பௌத்த பேரின வாதத்தின் பிதாமகன்கள் முன்னெடுத்துச் சென்றார்கள்.

அதனை பின்வந்த சிங்களத்தலைவர்களும் தொடர்ந்தார்கள். அதற்காக அவர்கள் பிரயோகித்த மிகப் பயங்கரமான ஆயுதமாக இனப்படுகொலைகளே அமைந்தன. அதனை இலங்கை வாழ் தமிழ்பேசும் இனத்தை அச்சுறுத்திப்பணிய வைக்கும் தந்திரமாகவே கையாண்டனர். ஆனால் அந்தப் படுகொலைகளை நிகழ்த்திய அரச பயங்கரவாதத்தை, தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்திய போராட்டம் மூலம் எதிர்கொள்ளத் தொடங்கியபோது, சிங்களத் தலைமைகளின் திட்டங்கள் ஆட்டம் கண்டன. இலங்கை என்ற நாட்டுக்குள் தமிழ்மக்கள் இணைந்து வாழமுடியாது என்ற முடிவை எடுக்கவேண்டி ஏற்பட்டபோது அதற்கு அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டமையும் (வேர்கள் இணையம் தட்டச்சு செய்து காலத்தின் தேவை கருதி மீள் வெளியீடு செய்கின்றது) ஒரு காரணமாக முன்னின்றது. அதனை எதிர்கொள்ளவோ ஜீரணிக்கவோ திராணியற்ற சிங்களத் தலைமைகள் இன்னும் இன்னும் இனப்படுகொலைகளையே பல்வேறு வடிவங்களில் முன்னெடுத்தன. வயலில், கடலில், தொழிலில் ஈடுபடும் போது தரைவழி, கடல்வழி போக்குவரத்தில் ஈடுபடும்போது, சொந்தக் குடியிருப்புக்களில், இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியிருந்த போது என பல்வேறு வகையிலும் இனப்படுகொலைகள் இடம்பெற்றன.

இனப்படுகொலைகளின் தொடக்க கால அரசுத் தலைவராக இருந்த டி.எஸ். சேனநாயக்கா அவரைத் தொடர்ந்து வந்த டட்லி சேனநாயக்கா, சேர்.ஜோன் கொத்தலாவல, எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டார நாயக்கா, சிறிமாவோ பண்டாரநாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ஆர்.பிரேமதாசா, டி.பி.விஜயதுங்க, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகிய அனைத்துத் தலைவர்களினது காலங்களிலும் தமிழினப்படு கொலைகள் இடையறாது நிகழ்ந்திருக்கின்றன. இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரலில் பிரதானமானதாக இருந்து வந்த படுகொலையினை ஒவ்வொரு தலைவர்களும் தத்தமது கால, சூழ்நிலைகளுக்கு ஏற்ப நிகழ்த்தியுள்ளனர். ஆயினும், அவை ஒருவரை விஞ்சியதாக மற்றவர் காலத்தில் நடந்திருப்பது தமிழ் மக்கள் எதிர்கொண்ட மிகப்பெரும் சவாலாகும்.

சிறிலங்கா அரசு கட்டவிழ்த்து விட்ட இப் படுகொலைகள் ஒரு அரசபயங்கரவாதமாக பரிணாமமடைந்த போது இதனை எதிர்கொள்ள, தமிழ்மக்கள் மேற்கொண்ட போராட்டங்கள் பயங்கரவாத நடவடிக்கைகளாகச் சித்தரிக்கப்பட்டன. அதற்கான சட்ட உருவாக்கங்களும் சிங்களப் பிரதிநிதித்துவத்தை பெரும்பான்மையாகக் கொண்ட பாராளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டன.

1979ஆம் ஆண்டு தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தை அரச பயங்கரவாதத்தினூடாக ஒடுக்குவதற்கும் தமிழினப்படுகொலையைப் பல்வேறு தளங்களில் விரிவாக்குவதற்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனக்கிருந்த பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி நிறைவேற்றினார். அது தொடர்ந்தும்இற்றைவரை நடைமுறையில் உள்ளது.பேரினவாதக் கட்சிகள் மாறிமாறி ஆட்சியைக் கைப்பற்றினாலும் இந்தச் சட்டத்தின்கீழ் எந்த மாற்றமும் நிகழவில்லை. இந்தச் சட்டம் தென்னாபிரிக்காவில் போத்தா அரசின் மிக மோசமான நிற ஒதுக்கல் சட்டத்தைவிடப் பயங்கரமானது என சர்வதேச யூரர் சபை, சர்வதேச மன்னிப்புச்சபை போன்றன எடுத்துக்காட்டி நீக்கும் படி கோரியபோதும் சிங்களத் தலைமைகள் இம்மியும் அசையவில்லை. இதன் மூலம் அரச பயங்கரவாதம் மேற்கொண்டசகல இனப்படுகொலைகளும் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளாகவே உலகின்முன் கொண்டுசெல்லப்பட்டன.

கிழக்கு மாகாணத்திலும் வடக்கிலும் நடந்த மிகப்பெரும் படுகொலைகளும் இவ்வாறே நியாயப்படுத்தப்பட்டன் அல்லது மூடிமறைக்கப்பட்டன. ஆலயங்களிலும் அகதி முகாம்களிலும் கூடியிருந்த தமிழர்கள் மீதும் சிகிச்சைக்காக நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டிருந்த மருத்துவமனைகள் மீதும் மாணவர்கள் கல்வி கற்றுக்கொண்டிருந்த போது பாடசாலைகள் மீதும் நடாத்தப்பட்ட தாக்குதல்களில் உயிர்கள் பறிக்கப்பட்டபோதும் அந்தச் சட்டத்தின்மூலம் அங்கீகரிக்கப்பட்டன: இது பெண்கள், குழந்தைகள், மாணவர்கள், வயோதிபர்கள், நோயாளிகள் என்று வேறுபாடில்லாமல் தமிழர்கள் என்பதற்காக அனைத்துத் தரப்பினர் மீதும் பிரயோகிக்கப்பட்டது.

சிங்களத் தலைமைகள் தமது அரசியல் ஆதாயத்துக்காக அரசியல் நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொண்ட தமிழினப் படுகொலைகள் மிகக் குரூரமானவையாக - மனிதாபிமானம் அற்றவையாக இருக்க வேண்டும் என்பதிலும் அக்கறைகாட்டியேவந்துள்ளன. இதற்கு1983, ஜீலை 11இல் ஜே.ஆர் லண்டன் டெலிக்கிராப் பத்திரிகைக்கு அளித்த பேட்டி நல்லதொரு சான்றாகும். "நான் யாழ்ப்பாணத்து மக்களுடைய அபிப்பிராயங்களைப் பற்றிக் கவலைப்பட மாட்டேன். அவர்களது உயிர், உடல்களைப் பற்றியும் கவலைப்பட மாட்டேன்: எனது அரசாங்கம் எதைச் செய்யவேண்டு மென முடிவெடுத்துவிட்டதோ அதைச் செய்தே தீரும்" என்று கூறியிருந்தார். சிங்களப் பேரினவாதத்தின் சிந்தனை இலங்கைத்தீவு முழுவதும் பௌத்த சிங்கள நாட்டிற்குரியது என்பதாகக் கட்டி வளர்க்கப்பட்டுவர, காலத்துக்குக் காலம் தமிழ்மக்களின் பாரம்பரிய நிலங்களில் சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டன. குற்றவியல் சட்டங்களினால் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டவர்கள், ஆயுதப் பயிற்சியளிக்கப்பட்டு தமிழர் நிலங்களில் குடியேற்றப்பட்டனர்.

இச் சிங்களக் குடியேற்றமானது 1940இல் ஆரம்பிக்கப்பட்டபோது, அப்போதைய காணி, விவசாய அமைச்சரான டி.எஸ்.சேன நாயக்கா அரசமரக் கன்றொன்றை நாட்டிய பின் ஆற்றிய உரை கவனத்திற் கொள்ளத்தக்கது. "இன்று நாட்டப்படும் இந்த அரசமரம் வளர்ந்து பெரு விருட்சமாகும்போது இந்த மண்ணில் உங்களைத் (குடியேற்றப் பட்ட சிங்களவரை) தவிர வேறெவரும் குடியிருக்கக்கூடாது."

1987, பெப்ரவரி 30இல் கொக்கட்டிச்சோலையில் இடம் பெற்ற படுகொலையும் அதற்கென அளிக்கப்பட்ட ஒரு பயிற்சியின் அடிப்படையில் செய்யப்பட்டதே. பிரிட்டனின் கீனிமீனி (**K.M.S**) பயிற்சி படைகளுக்கு அளிக்கப்பட்டதாகவும் அதனை பரீட்சித்துப் பார்ப்பதற்காக பெற்றபயிற்சியினைபடையினர் சரியாகச் செய்கின்றார்களா என்று அறிவதற்காக இப்படுகொலைகள் நிகழ்த்தப்பட்டதாகவும் பயிற்சியளித்தவர்களே தெரிவித்திருக்கின்றார்கள். வரப்பட்ட தினமான 1956, ஜீன் 5ஆம் திகதி நடைபெற்றது. அம்பாறை கல்லோயாவில் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் அக் கிராமத்தில் பூர்வீகவாசிகளான தமிழ்மக்கள் மீது மேற்கொண்ட இன அழிப்பின்போது 150 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். அன்றைய தினமே ஒடுக்கு முறையின் இன்னொரு வடிவமான பாலியல் வன்முறைச் சம்பவமும் ஆரம்பமானது.

தமிழர்களுக்குத் தென்னிலங்கையில் மட்டுமல்ல, தமிழர் தாயகத்தில் மட்டு மல்ல சிறைச்சாலைகளிலும்கூட பாதுகாப்பு இல்லை என்பதையும் சிறிலங்கா அரசு காலத்துக்குக் காலம் நிரூபித்து வந்தது. வெலிக்கடைச் சிறை, பூசா, களுத்துறை,பெலவத்தை, பிந்துனுவெவ தடுப்பு முகாம்கள், திருகோணமலைச் சிறை போன்றவற்றில் நடைபெற்ற தமிழர் படுகொலை தொடர்பாக எவருமே தண்டிக்கப்படவில்லை. வெலிக்கடைச் சிறையில் 1983, ஜீலை 25இல் 35 தமிழர் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட பின்னர் மீண்டும் ஜீலை 27இல் அதே சிறையில் எஞ்சியோர் பதினெட்டுப்பேர் படுகொலை செய்யப்படக் கூடியதாக இருந்த தென்றால் தமிழர்களின் உயிர் தொடர்பாகச் சிறிலங்கா ஆட்சியாளர்கள் கொண்டிருந்த நிலைப்பாடுகள் எவ்வாறிருந்தன என்பதை உணரமுடியும். இவ்வாறு நீண்ட இந்த இன அழிப்பு முயற்சிகளினால் இதுவரை அறுபதினாயிரத்துக்கும் அதிகமான தமிழ்மக்கள் கொல்லப்பட்டனர். ஆயினும் இவற்றால் தமிழ்மக்களின் விடுதலைப்போராட்டம் தடைப்படவில்லை.

மாறாக அது முனைப்படைந்து கூர்மைபெற்றுள்ளது. இவ் விடுதலைப்போராட்டம் இன்று அரசியல், இராணுவ தளங்களில் மிகப் பலம் மிக்கதாக பரிணாமமடைந்துள்ளது. தேசிய விடுதலைப்போராட்டத்தின் தேவை வலியுறுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் இதனைப் புலமைசார் நிலையில் வலியுறுத்தி வருபவர்களும் ஊடகவியலாளர்களும் படுகொலை செய்யப்படும் துர்ப்பாக்கிய நிலையை சிங்களப் பேரினவாதம் அண்மைக் காலமாகத் தீவிரப்படுத்தியுள்ளது. சட்டமேதை குமார் பொன்னம்பலம், ஊடகவியலாளர்களான மயில்வாகனம் நிமலராஜன், ஐயாத்துரை நடேசன், தர்மரட்ணம் சிவராம் போன்றவர்களுடைய படுகொலைகள் சிங்களப் பேரினவாதத்தின் அகோர முகத்தின் வெளிப்பாடுகளாகும்.

தமிழினப் படுகொலைகளுக்காக உலகின் மிகக் கொடூரமான முறைகளை எல்லாம் தனது படைகளுக்குப் பயிற்றுவித்துச் செயற்படுத்திப் பார்க்கும் அரசியல் தலைமைத்துவங்கள் தொடர்ந்தும் இலங்கைத் தீவை ஆட்சிசெய்கின்றன. இதற்கென வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் பயிற்சியளித்துள்ளனர். இதனைச்சிறிலங்காஇராணுவஉயர்அதிகாரி ஒருவரே வெளிப்படையாக ஊடகங்களுக்குத் தெரிவித்திருக்கின்றார். சிறிலங்கா இராணுவத்தில் விசேடகுழுக்களின் உறுப்பினர்கள் என இனங்காணப்பட்ட 300-400வரையான ஆட்களுக்கு கட்டுப்பாடின்றிக் கொலை செய்வதற்காகப்பயிற்சி அளிக்கப்பட்டதாக சண்டே லீடருக்கு வழங்கிய தகவலில் தெரிவித்திருக்கின்றார். பொதுப்படையாகவே சிறிலங்காப் படையினர் எத்தகைய மனோபாவத்துடன் தயார்ப்படுத்தப் பட்டிருக்கின்றார்கள் என்பதை அவர்களுக்கு விசேட பயிற்சியை அளிக்க வந்த பிரித்தானிய எஸ்.ஏ.எஸ் படைப்பிரிவைச் சேர்ந்த அதிகாரியே எடுத்துரைத்துள்ளார். அவர்களுக்கு நல்லது கெட்டது என்று எதுவும் இல்லை. தமிழரைக் கொன்றொழிப்பதைத்தவிர வேறு எந்தச் சிந்தனையும் இல்லை. நாங்கள் பயிற்சியளித்தவர்களில் சிலர் மிகக் கொடூரம் புரிந்தவர்கள் என **Immediate Action** என்ற தனது நூலில் விபரித்திருக்கின்றார்.

1987, பெப்ரவரி 30இல் கொக்கட்டிச் சோலையில் இடம்பெற்ற படுகொலையும் அதற்கென அளிக்கப்பட்ட ஒரு பயிற்சியின் அடிப்படையில் செய்யப்பட்டதே. பிரிட்டனின் கீனிமீனி (**k.m.s**) பயிற்சி படைகளுக்கு அளிக்கப்பட்டதாகவும் அதனை பரீட்சித்துப் பார்ப்பதற்காக-பெற்ற பயிற்சியினை படையினர் சரியாகச் செய்கின்றார்களா என்று அறிவதற்காக இப்படுகொலைகள் நிகழ்த்தப்பட்டதாகவும்பயிற்சியளித்தவர்களே தெரிவித்திருக்கின்றார்கள்.

தமிழ்மக்களையும் தமது பிரஜைகளே என வெளியுலகிற்குக் கூறிக்கொள்ளும் தன்னை ஒரு ஜனநாயக அரசாகக் காட்டிக் கொள்ளும் சிறிலங்கா தமிழினத்தை அழிப் பதற்காக எவ்வாறு தயார்ப்படுத்தல்களை மேற்கொண்டுள்ளது என்பதற்கு இவை சிறு எடுத்துக்காட்டுக்களே. சிறிலங்கா அரசினதும் படைத்துறையினதும் இருப்பும் வளர்ச்சியும் தமிழினப்படுகொலைகளையே நோக்கமாகக் கொண்டவை. இவையின்றி அவற்றால் தம்மைத் தக்க வைத்துக்கொள்ள இயலாது என்பது தான் யதார்த்தமானது. கடந்த மூன்றரை வருடங்களாக நிலவும் சமாதானத்துக்கான சூழலிலும் இது புலப்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

கிழக்கில் காஞ்சிரங்குடாவில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டமையும் மட்டக்களப்பு சந்திவெளியிலும் யாழ்ப்பாணம் திருநெல்வேலி யிலும் மக்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டமையும் சிறிலங்கா படைப் பாரம்பரியத்தின் வெளிப்பாடே ஆகும். இவ்வாறே படைகள் நேரடியாகப் படுகொலைகளை நிகழ்த்த முடியாது போயிருக்கும் சூழ்நிலைகளில் தனது புலனாய்வாளர்கள் ஊடாகத் தமிழ் மக்களை இலக்குவைத்து தாக்குதல்களை நடாத்திக் கொண்டிருக்கின்றன. இதன் விளைவாக கிழக்கிலும் தென்னிலங்கையிலுமாக ஏராளமான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள்.

**தொடரும்...**

**நெற்றிபொறியன்**

# நாட்டை மறுசீரமைக்க முடியாத நிலையில் ஜனாதிபதியின் உருக்கமான உரை!

எமது நாட்டுக்கு மட்டுமன்றி, அபிவிருத்தி அடைந்த, அபிவிருத்தி அடையாத அனைத்து நாடுகளுக்குமே, இன்று ஒரு பாரிய பிரச்சினையாக கொவிட் 19 தொற்றுப் பரவல் மாறியுள்ளது. உலகெங்கிலும் உள்ள சுமார் 178 மில்லியன் பேர், இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 3.8 மில்லியன் பேர் இதுவரையில் உயிரிழந்துள்ளனர். கொரோனா வைரஸ் தொற்றின் ஆரம்பக் கட்டத்தில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட அபிவிருத்தியடைந்த நாடுகள், தற்போது அதன் பாதிப்பைப் பெருமளவில் கட்டுப்படுத்தியுள்ளன. அந்நாடுகளைச்சேர்ந்த மக்களில் பெருமளவானோருக்குத் தடுப்பூசி ஏற்றியதனாலேயே, தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த முடிந்தது. தடுப்பூசியை உற்பத்தி செய்யும் சில நாடுகளால் அவற்றை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலைமை காணப்பட்டாலும், இதுவரையில் எந்தவொரு தடுப்பூசியையும் தமது மக்களுக்காகப் பெற்றுக் கொடுக்க முடியாத நாடுகளும் உள்ளன.

இலங்கைக்குத் தடுப்பூசியைக் கொண்டுவருவது தொடர்பில், கடந்த காலத்தில் நான் விஷேட கவனம் செலுத்தியிருந்தேன். சீனா, இந்தியா போன்ற நாடுகளின் அரச தலைவர்களுடன், தனிப்பட்ட முறையில் உரையாடினேன். கடிதத் தொடர்புகள் மூலமும், கோரிக்கை விடுத்திருந்தேன். எமது வெளிநாட்டு அமைச்சின் ஊடாகவும் வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் ஊடாகவும், தடுப்பூசி உற்பத்தி செய்யும் நாடுகளுடன் கலந்துரையாடினோம். எமது அதிகாரிகள், தடுப்பூசி உற்பத்தி செய்யும் நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளார்கள்.

எமது நாட்டு மக்கள் அனைவருக்கும் இந்தத் தடுப்பூசியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே, இம்முயற்சிகளின் நோக்கமாகும். இந்த முயற்சிகளின் பயனாக, ஒவ்வொரு மாதமும் எமக்குத் தேவையான பெருமளவு தடுப்பூசிகள் நாட்டுக்கு கிடைத்துக்கொண்டிருக்கின்றன. உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகளை மட்டுமே நாம் பயன்படுத்துகிறோம். தற்போது வரையில், 12 இலட்சத்து 64, ஆயிரம் அஸ்ட்ரா செனெகா தடுப்பூசிகள், 31 இலட்சம் சைனோஃபாம் தடுப்பூசிகள், ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ஸ்புட்னிக் தடுப்பூசிகள் உள்ளடங்களாக, 44 இலட்சத்து 94 ஆயிரம் தடுப்பூசிகள் எமக்குக் கிடைத்திருக்கின்றன. தற்போது, நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாட்டின் மொத்தச் சனத்தொகையில், சுமார் 3 மில்லியன் பேருக்குத் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன. ஜூலை மாதத்தில், 4 மில்லியன் சைனோஃபாம் தடுப்பூசிகளும் 2.5 இலட்சம் சைனோவெக் தடுப்பூசிகளும் கிடைக்கவுள்ளன. அதேபோன்று, இரண்டு மில்லியன் ஸ்பூட்னிக் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, ஓகஸ்ட் மாதமளவில் 5 மில்லியன் சைனோஃபாம் தடுப்பூசிகளும் 2.5 மில்லியன் சைனோவெக் தடுப்பூசிகளும், 2 மில்லியன் ஸ்பூட்னிக் தடுப்பூசிகளும் கிடைக்கவுள்ளன. இறுதியாக, செப்டம்பர் மாதத்தில் 3 மில்லியன் சைனோஃபாம் தடுப்பூசிகள் கிடைக்கவுள்ளன. இவ்வருடம் செப்டம்பர் மாதமளவில், 13 இலட்சம் மக்களுக்கான தடுப்பூசிகளை வழங்கக் கூடியதாக இருக்கும். அதன்படி, 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இக்காலப்பகுதியில் தடுப்பூசிகளை வழங்கக் கூடியதாக இருக்கும். இது மிகவும் மகிழ்ச்சிக்குரிய நிலைமையாகும்.

இந்த நாட்டின் எதிர்காலம் பற்றிய பெரும் எதிர்பார்ப்புடனேயே, 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம், மக்கள் என்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தனர். எத்தகைய பாரிய பிரச்சினைகளுக்கு மத்தியிலும், அந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு நான் அர்ப்பணிப்புடன் உள்ளேன். ஒருபோதும் முடிவுக்குக் கொண்டுவரப்பட மாட்டாது எனக் கருதப்பட்ட எல்டிடிஈ பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டுவரும் பொறுப்பை அன்று நாம் பொறுப்பேற்றதைப் போன்று, நாடு முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளில் இருந்து நாட்டை விடுவித்து, மக்களுக்கு சுபீட்சத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துக்காக, நான் அர்ப்பணிப்புடன் உள்ளேன்.

நான் எப்போதும் ஒரு திட்டத்தின் அடிப்படையிலேயே செயற்படுகின்றேன். எதிர்காலத்துக்கான திட்டத்தை வகுக்கும் போது, நாம் கடந்த காலத்தை மறந்துவிடக் கூடாது. அத்துடன், தற்காலத்தைப் பற்றியும் மிகச்சரியாக ஆராய்ந்து விளங்கிக்கொள்வது முக்கியமானதாகும். தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தி, நாட்டை ஸ்திரப்படுத்த வேண்டுமென்பதே, 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது எனக்கு வாக்களித்த 69 இலட்சத்துக்கும் அதிகமான மக்களின் முக்கிய கோரிக்கையாக இருந்தது. அன்று இந்த நாட்டு மக்கள், மத அடிப்படைவாதம் குறித்து பெரும் அச்சம் கொண்டிருந்தனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன், எமது நாட்டின் பாதுகாப்புப் பொறிமுறை, பெரிதும் பலவீனப்பட்டிருப்பதை மக்கள் விளங்கிக்கொண்டனர். கடந்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல தீர்மானங்கள் காரணமாக, எமது புலனாய்வுத்துறை மிகவும் பலவீனப்பட்டிருந்தது. எமது பாதுகாப்புத்துறை, சர்வதேச மட்டத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டு, இழிவுபடுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டது. எமது புனிதஸ்தலங்கள் பலவந்தமாக கைப்பற்றப்பட்டிருந்தன. தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பகிரங்கமாக அழிவுக்கு உள்ளாக்கப்பட்டன. 2009ஆம் ஆண்டில் முடித்து வைக்கப்பட்ட பயங்கரவாதம், மிகவும் பயங்கரமான தோற்றத்துடன் மீண்டும் உருவாகியிருந்தது. தேசிய பாதுகாப்பு தொடர்பில், நாம் தற்போது பாரிய முன்னேற்றத்தைக் கண்டுள்ளோம். பொறுப்புக் கூறவேண்டிய பதவிகளுக்கு, பொருத்தமான அதிகாரிகளை நியமித்துள்ளோம். பல்வேறு அழுத்தங்கள் காரணமாக வீழ்ச்சியடைந்திருந்த பாதுகாப்புத் துறையினரின் மனநிலையை, நாம் மீண்டும் பலப்படுத்தியுள்ளோம். அன்று பலவீனப்பட்டிருந்த புலனாய்வுத் துறையை, மீண்டும் ஒழுங்கமைத்தோம். கடந்த ஆட்சிக் காலத்தில் மறக்கடிக்கப்பட்டிருந்த பாதுகாப்புத் திட்டங்களை, மீண்டும் நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

நாட்டுக்குப் பெரும் சவாலாக மாறியிருந்த பாதாள உலகக் கோஷ்டிகளை, வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியுள்ளோம். போதைப்பொருள் பிரச்சினையை ஒரே தடவையில் தீர்ப்பது கடினம் என்றபோதும், அதனைப் பெருமளவு கட்டுப்படுத்தியுள்ளோம். முழுமையாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். எமது பாரம்பரியம், எமது கலாசாரம், தேசியம் என்பவற்றைப் பற்றி கதைப்பது இழிவாக கருதப்பட்டு வந்த யுகத்தை நாம் கடந்து வந்துள்ளோம். அந்த நிலைமையை நாம் மாற்றியிருக்கிறோம். அனைத்து இனத்தவர்களும் அனைத்து மதத்தவர்களும், தமது தனித்துவங்களைப் பாதுகாத்து, அடுத்தவருக்குப் பாதிப்பின்றி, சுய மரியாதையுடன் வாழ்வதற்கான அமைதியான சூழலை, இந்தக் குறுகிய காலத்தில் நாம் கட்டியெழுப்பியுள்ளோம்.

கடந்த காலத்தில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்த, மு/ஹது விகாரை, கூரகல, தீகவாபி போன்ற கலாசார, மத மரபுரிமைகளை நாம் பாதுகாத்துள்ளோம்.



இன்று இந்த நாட்டின் ஒருமைப்பாடு குறித்து அச்சப்படத் தேவையில்லை. அதேபோன்று, எமது நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கு, இந்த அரசாங்கம் எவருக்கும் இடமளிக்க மாட்டாது. தேசிய பாதுகாப்பை எனது அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளது.

வீழ்ச்சியடைந்திருந்த பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதே, எமது மற்றமொரு முக்கிய சவாலாக இருந்தது. இதற்கான சிறந்த திட்டத்தை நாம் முன்வைத்திருக்கிறோம். கடந்த ஒன்றரை வருட குறுகிய காலப்பகுதியில், நாம் முகங்கொடுத்த முக்கிய சவால்கள், அவற்றை நாம் எதிர்கொண்ட விதம் பற்றி மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். 2015ஆம் ஆண்டில் உருவான புதிய அரசாங்கத்திடம் இந்த நாட்டை மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் கையளிக்கும் போது, எம்மிடம் பலமான தொரு பொருளாதாரம் இருந்தது. சுமார் 7 சதவீத பொருளாதார வளர்ச்சியுடன், ஆசியாவிலேயே சீனாவுக்கு அடுத்த நிலையில் நாம் இருந்தோம். நாட்டுக்குப் பெருமளவு வெளிநாட்டு முதலீடுகள் கொண்டுவரப்பட்டன. ரூபாயின் பெறுமதி ஸ்திரமான நிலையில் இருந்தது. வெளிநாட்டு இருப்பு பலமானதாக இருந்தது. கடன்சுமை தளர்த்தப்பட்டு இருந்ததுடன், முழு நாடுமே ஒரு தொழில் நிலையமாக மாறி, துரித அபிவிருத்திகள் கண்டுவந்தன.
கடந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்த 2015 முதல் 2019 வரையான காலப்பகுதியில், இந்த நாட்டில் எந்தவோர் இயற்கை அனர்த்தமும் ஏற்படவில்லை. அக்காலப்பகுதியில், கொரோனா போன்ற உலகளாவிய பிரச்சினையும் இருக்கவில்லை. என்றாலும், அப்போதைய அரசாங்கத்தின் இயலாமை காரணமாக, எமது நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. 2019ஆம் ஆண்டாகும் போது, நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் 2.1 சதவீதம் என்ற நிலைக்கு தள்ளப்பட்டிருந்தது. அரசுக் கடன் 7,400 பில்லியன் ரூபாவில் இருந்து 13,000 பில்லியன் ரூபாய் வரை அதிகரித்துக் காணப்பட்டது. மக்கள் மீதான வரிச்சுமை, இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டது. ரூபாயின் பெறுமதியில் தளம்பல் ஏற்பட்டு, பொருட்களின் விலையும் அதிகளவு அதிகரித்துக் காணப்பட்டது. ஏற்றுமதி வருமானம் குறைந்து, வெளிநாட்டு இருப்பும் பலவீனமடைந்திருந்தது.

இவ்வாறு வீழ்ச்சி கண்டிருந்த ஒரு பொருளாதாரத்துடன் தான், நான் இந்த நாட்டைப் பொறுப்பேற்றேன். என்றாலும், அந்த யதார்த்தத்தை மிகச் சரியாக விளங்கிக்கொண்டு, முறையானதொரு திட்டத்துடன் தான் நாம் அந்தப் பொறுப்பைக் கையில் எடுத்தோம். எதிர்பாராத விதமாக, எமது நாட்டில் மட்டுமன்றி, முழு உலகத்துக்குமே பிரச்சினையாக, கொரோனா வைரஸ்தொற்றுப் பரவல்மாறியது. அதனால், அந்தத் திட்டங்களை நாம் எதிர்பார்த்த வகையில் நடைமுறைப்படுத்த முடியாத தொரு சூழ்நிலை உருவானது. நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு ஒரு மாதம் நிறைவடைவதற்கு முன்னர், கொவிட் 19 தொற்று சீனாவில் ஆரம்பித்து, முழு உலகிலும் பரவத் தொடங்கியது. இச்சந்தர்ப்பத்தில், இந்நோய் பற்றிய மருத்துவ ஆலோசனைகளை வழங்கத் தேவையான அறிவு, எந்தவொரு நாட்டிடமும் இருக்கவில்லை. உலகச் சுகாதார ஸ்தாபனமும், இதனை வியப்புடனேயே பார்த்தது. தொற்றுப் பரவலின் தன்மையைப் புரிந்துகொண்ட உடனேயே, மருத்துவர்கள், சுகாதார நிபுணர்கள், சிறந்த நிர்வாகிகள், பாதுகாப்புத்துறை முக்கியஸ்தர்களைக் கொண்ட ஜனாதிபதிச் செயலணியை ஸ்தாபித்து, எதிர்கொள்ளக்கூடிய எந்தவொரு நிலைமையையும் முகங்கொடுக்கத் தயாரானோம். சீனாவில் தொற்றுப் பரவல் ஆரம்பித்த வூஹான் மாநிலத்தில் கல்வி கற்றுவந்த வெளிநாட்டு மாணவர்கள் அநாதரவாக இருந்த நிலையில், ஏனைய நாடுகளைப் பார்க்கிலும் அவசரமாகச் செயற்பட்டு, முழுமையான பாதுகாப்புடன் ஒரு விமானத்தைச் சீனாவுக்கு அனுப்பி, வூஹானில் சிக்கியிருந்த இலங்கை மாணவர்கள் 34 பேரையும் பாதுகாப்பாக நாட்டுக்கு அழைத்து வந்தோம். அவர்களை, தியத்தலாவ இராணுவ முகாம் ஒன்றில் தனிமைப்படுத்தி, பின்னர் அவர்களது குடும்பங்களுடன் இணைத்ததன் மூலம், ஓர் அரசாங்கத்தின் சமூகப் பொறுப்பு குறித்த சிறந்த முன்னுதாரணத்தை, ஏனைய நாடுகளுக்கு வழங்கினோம்.

இலங்கையில் முதலாவது கொரோனா கொத்தணி உருவான சந்தர்ப்பத்தில், உரிய நேரத்தில் நாட்டை முடக்கி, பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து, சுகாதாரப் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்தினோம். தொற்றுக்குள்ளான அனைவருக்கும், அரசாங்கத்தின் செலவில் சிகிச்சைகள் வழங்கப்பட்டன. வைரஸ் தொற்றிய காலத்தில், அவர்களுடன் தொடர்புகளைப் பேணிய அனைவரையும் புலனாய்வுத் துறையின் உதவியுடன் கண்டறிந்து, அவர்களையும் தனிமைப்படுத்தினோம். அந்த வகையிலேயே, முதலாவது கொரோனா அலையை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்த எம்மால் முடிந்தது. உலகில் ஏனைய நாடுகள் கொரோனா வைரஸ் தொற்றின் மூலம் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த சுமார் மூன்று மாதக் காலப்பகுதியில், இலங்கையில் எந்தவொரு தொற்றாளரும் கண்டறியப்படவில்லை. எந்தவொரு நாட்டினாலும், விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களை நீண்டகாலம் மூடிவைக்க முடியாது. வெளிநாடுகளில் அநாதரவான நிலையில் உள்ள தமது நாட்டு மக்களை நாட்டுக்கு மீள அழைத்துவர வேண்டும். ஏற்றுமதி -இறக்குமதி நடவடிக்கைகளை, கட்டுப்பாடுகளின் கீழேனும் மேற்கொள்ள வேண்டியிருக்கும். இந்தத் தவிர்க்க முடியாத உலகளாவிய தொடர்புகள் காரணமாக, கொரோனா வைரஸ் மீண்டும் நாட்டுக்குள் பரவுவதை முழுமையாகக் கட்டுப்படுத்த எந்தவொரு நாட்டினாலும் முடியவில்லை. நாட்டை மூடிவிடுவதால், அபாய நிலையைத் தற்காலிகமாக மட்டுமே கட்டுப்படுத்த முடியும்.

தொடரும்...

# பொருளாதார ரீதியாக இலங்கை கடனாளியாக மாறியிருக்கின்றது -மாவை-

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவுடனான நேர்காணல்



கேள்வி :- கொரோனா வைரசின தாக்கம் உலகளவில் வெகுவாக உணரப்பட்டுவரும் இவ்வேளையில் இலங்கையிலும் இவ் வைரசின் தாக்கம் அதிகமாக இருக்கிறது. மக்கள் சிரமத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். வடகிழக்கில் பொருளாதார ரீதியாக மக்கள் அதிகமாக கஸ்டப்படும் நிலையில் இவர்களுக்கான நிவாரண வசதிகள் அல்லது தடுப்புசிகளுக்கான நடவடிக்கைகள் குறித்து தமிழ் மக்களது பிரதிநிதிகள் என்கிற வகையில் உங்களது ஆக்கபூர்வமான நடவடிக்கைககள் என்ன?

பதில் – ஆம். நாங்கள் அரசிடம் பேசியிருக்கிறோம். பாராளுமன்றிலும் அரச பிரதிநிதிகளிடமும் நாம் இவ்விடயம் குறித்து பேசினோம். இந்தியத் தூதுவரைச் சந்தித்த போதும் எமது பிரதேசங்களில் தடுப்பூசிகள் போதுமானதாக இல்லை என்பதை வலியுறுத்தியிருக்கிறோம். இதற்கு நீங்கள் உதவி செய்யவேண்டும் என நாம் கேட்க, அவரும் உதவி செய்வதாகக் கூறியிருந்கார். முதன் முதலில் இந்தியாதான் இலங்கைக்கு ஐந்து இலட்சம் தடுப்பூசிகளை வழங்கியிருக்கிறது. இந்தியாதான் பல நாடுகளுக்கு உதவியிருக்கிறது. இந்தியா பாரதூரமான நோய்த் தொற்றால் தவித்துக்கொண்டிருக்கிறது. இந்த விடயம் சம்பந்தமாக தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்கள் இந்தியப் பிரதமர் அவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

உலகிலுள்ள வல்லரசு நாடுகளே இவ் வைரஸ் தொற்றினால் வெகுவாகப் பாதிக்கப்பட்டு உயிரிழப்புக்களைச் சந்தித்துவரும் இந்நிலையில், அவர்களே தங்களிடம் இருக்கும் தடுப்பூசிகள் போதாது என்று கூறுமளவில் இருக்கிறது. கொரோனா வைரஸ் இன்று திரிபடைந்து புதிது புதிதான பெயர்களுடன் பரவி வருவதை நாம் காண்கிறோம். உலக நாடுகளும் தடுப்பூசிகளை தொடர்ந்தும் உற்பத்தி செய்து வருகிறார்கள்.

இந்தியா எங்களுக்கு தடுப்பூசிகளைத் தருவதற்கு விரும்பினாலும் அவர்களின் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடியான சூழலில், முதலமைச்சர் ஸ்டாலின் – பிரதமர் மோடி அவர்களுடனான சந்திப்பு நடைபெற்றிருக்கிறது.

அந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகிய நாமும், உலக சுகாதார நிறுவனமும், இலங்கை அரசு, இலங்கையின் மருத்துவ நிபுணர்கள் கூறுகின்ற சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றித்தான் செயற்படவேண்டும். இதனையே எமது வடகிழக்கு வாழ் மக்களுக்கும் நாம் அறிவுறுத்த விரும்புகின்றோம்.

பொருளாதார ரீதியாக இலங்கை நாடு மிக மோசமான கடனாளியாக மாறியிருப்பது அனைவருக்கும் தெரியும். கடனை வாங்குவதற்கும், இருக்கின்ற கடனைத் திருப்பியளிப்பதற்கும் வழியில்லாமல் இருக்கிறது.

அரசு பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் கட்சிகளைச் சந்தித்து, உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசனைகள், இந்நாட்டில் இருக்கும் மருத்துவ நிபுணர்கள் கூறுகின்ற ஆலோசனைகளை அரசியல் தலைவர்களிடத்திலும் கூறி, இந்நாட்டில் கொரோனா வைரசைக் கட்டுப்படுத்தி உயிராபத்துக்களைக் குறைக்க முறையான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைத் தான் நான் கூறிவைக்க விரும்புகிறேன்.

கொரோனா வைரஸ் ஆரம்பமாகி ஒரு வருடத்தைக் கடந்திருக்கிறது. ஆரம்பத்தில் இந்த தடைகளையும், தீவிரமான கட்டுப்பாடுகளையும் விதித்திருந்தால் இவ்வளவு தூரம் இந்த நாட்டில் கொரோனாவின் தாக்கம் தீவிரமடைந்திருக்காது.

இன்னமும் இவ் வைரஸ் பரவல் தீவிரமடையப்போகின்றது என்று கூறுமளவிற்குத்தான் ஒவ்வொரு நாளும் செய்திகள் வெளிவருகின்றன அளவிற்கு பொறுப்பற்றதன்மையில் தான் அரசு செயற்பட்டு வருகிறது.

தமிழ் மக்களை பிரதிபலிக்கின்ற கட்சி என்ற வகையில் பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றுகூட்டி மக்களைப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதி அவர்களை நாம் வலியுறுத்துகிறோம்.

தொழில்களை இழந்துள்ளனர். புதிய தொழில்களை செய்ய முடியாமல் இருக்கிறது. மக்களிடத்தில் பணம் இல்லை.

பொருளாதார ரீதியாக சிரமப்படுகிறார்கள். இந்நிலையில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்திருக்கிறது. திடீர் திடீர் என ஒரு கட்சிகளுடனும் கலந்துரையாடாமல், நிபுணத்துவம் வாய்ந்தவர்களுடன் உரையாடாமல், தாம் நினைத்தவாறு பொருட்களின் விலைகளை அதிகரிக்கிறது அரசு. இதனால் மக்கள் அல்லல்படுகிறார்கள். பெரும்பான்மைப் பலத்தால் ஆட்சிபீடமேறிய அரசின் பொருத்தமற்ற செயற்பாடுகளால் தென்னிலங்கை மக்களும் இன்று கோபமடைந்திருக்கிறார்கள் என்பதை இன்றைய ஆட்சியாளர்கள் உணர்ந்து செயற்படவேண்டும்.

**நேர்காணல் : இரணியன்**

# அரசியல் கைதிகள் விடுதலையில் உரிமை கொண்டாடும் அருகதை த.தே.கூட்டமைப்புக்கு இல்லை அரசியல் ஆய்வாளர் எம்.எச்.எம். இப்ராஹிம்

கடந்த காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரதான பாத்திரம் வகித்து உருவாக்கிய நல்லாட்சி அரசாங்கத்தினால் கூட சாதிக்க முடியாத அரசியல் கைதிகள் விடுதலை விடயத்தை கோத்தாபய அரசு வெற்றிகரமாக செய்திருக்கிறது. இந்த அரசியல் கைதிகள் விடயத்தில் உரிமை கொண்டாடும் அருகதை தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கோ அல்லது எதிரணி அரசியல்வாதிகளுக்கோ இல்லையென அரசியல் ஆய்வாளரும், சமூக மேம்பாட்டுக்கான நல்லிணக்க பேரவையின் தலைவருமான எம்.எச்.எம். இப்ராஹிம் தெரிவித்தார்.

அன்று (25) காலை கல்முனையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிட்ட அவர், அரசியல் கைதிகளாக சிறையில் தடுத்து வைத்திருந்தோரை இந்த அரசு விடுதலை செய்ததை பாராட்டியே ஆகவேண்டும். இதை கோத்தாபய அரசு அரசியலுக்காகத்தான் செய்துள்ளார்கள் என்று கூறும் அரசியல்வாதிகளுக்கு ஒரு வியாபாரம் செய்பவர் ஆதாயத்தை முன்னிறுத்தி பல சலுகைகளை வழங்குவதை நினைவூட்ட விரும்புகிறேன். இந்த விடுதலை நடவடிக்கையானது இந்த அரசின் முற்போக்கு நடவடிக்கையாக கொண்டு நாம் பாராட்ட வேண்டும். இந்த விடுதலையில் அரசியல் இலாபம் உள்ளதாக இருக்கிறது என்று கூறுபவர்கள் அந்த இலாபத்தில் மக்களாகிய நாமும் இலாபம் அடைந்துள்ளோம் என்பதை கூறுகிறார்கள் இல்லை.

தமிழ் மக்களின் மனதை வெல்ல இந்த நடவடிக்கை இடம் பெற்றுள்ளதாக நாம் கருதலாம். கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் பலமாக இருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு அடங்களாக ஏனைய தமிழ் அரசியல்வாதிகளினால் கூட சாதிக்க முடியாது போன விடயத்தை இந்த அரசு செய்துள்ளது என்றார்.




# தென் கடற்பரப்பில் மற்றுமொரு கப்பலில் தீ பரவல்

தென் கடற்பரப்பில் மகா ராவணா வெளிச்ச வீட்டிலிருந்து கிழக்கே 480 கடல் மைல் தூரத்தில் பயணித்த கப்பலில் தீ பரவியுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

**MSC Messina** எனும் கப்பலின் எஞ்சின் அறையில் தீ பரவியுள்ளதாக தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதென கடற்படையின் ஊடகப்பேச்சாளர் கெப்டன் இந்திக்க டி சில்வா குறிப்பிட்டார்.

நாட்டின் மீட்கும் வலயத்திலிருந்து வெகு தொலைவில் குறித்த கப்பல் பயணிப்பதாகவும் அவர் கூறினார்.

இந்த சம்பவம் குறித்து, குறிப்பிட்ட கடற்பிராந்தியத்தில் பயணிக்கும் கப்பல்களுக்கு அறிவித்துள்ளதாகவும் கடற்படையின் ஊடகப்பேச்சாளர் கெப்டன் இந்திக்க டி சில்வா மேலும் தெரிவித்தார்.





# பிராந்தியச் செய்திகள்



## நல்லூரில் விடுதி முற்றுகை இரு பெண்கள் உட்பட அறுவர் கைது

யாழ்ப்பாணம், நல்லூர் கோயில் வீதியில் கலாசாரச் சீரழிவு நடவடிக்கைகள் இடம்பெற்றன என்று கூறப்படும் விடுதி ஒன்று யாழ்மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் முற்றுகை யிடப்பட்டது. இதன்போது, குறித்த விடுதியிலிருந்து இரண்டு பெண்கள், 3 இளைஞர்கள் மற்றும் விடுதி உரிமையாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நல்லூர் கோயில் வீதியிலுள்ள விடுதியில் கலாசாரச் சீரழிவு நடவடிக்கைகள் இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கமைய, அந்த விடுதியைச் சோதனையிடுவதற்கான அனுமதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் பெறப்பட்டது. இதையடுத்து யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான பொலிஸ் பிரிவினர் அந்த விடுதியைச் சுற்றி வளைத்து அங்கிருந்த இரண்டு பெண்கள் உட்பட 6 சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் குருநகர், மானிப்பாய் மற்றும் உரும்பிராயைச்சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேக நபர்கள் 6 பேரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்கரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான், சந்தேக நபர்கள் ஆறு பேரையும் வரும் ஜுலை 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.




## வடக்கில் வெளிநாட்டவர்களாலும் அபகரிக்கப்படும் காணிகள்

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பறங்கிக்கமம் பகுதியை அண்டிய பகுதியில் சட்ட விரோதமாக காடுகள் அழிக்கப்படுவதாகவும் பல ஏக்கர் காணிகள் தனி நபர்களாலும் வெளிநாட்டை சேர்ந்தவர்களாலும் அபகரிக்கப்படுவதாகவும் பறங்கி கமத்தை சேர்ந்த மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

யுத்தம் காரணமாக பல முறை இடப்பெயர்வுகளை சந்தித்த தங்களுக்கு அரசாங்கத்தினால் விவசாயம் செய்வதற்கு என இரு ஏக்கர் விவசாய காணிகள் வழங்குவதாக தெரிவிக்கப்பட்டு அதற்கு தாங்கள் விண்ணப்பித்ததாகவும் விண்ணப்பித்த தங்களுக்கு வரவில்லை எனவும் தங்கள் பிள்ளைகளுக்கு வந்துள்ளதாகவும்



ஆனாலும் பிள்ளைகள் வயல் செய்யவோ தோட்டம் செய்யவோ இதுவரை காணி வழங்கப்படவில்லை எனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது ஒரு புறம் இருக்க வயல் செய்ய காணி வழங்காவிட்டாலும் வாழ்வதற்கே தற்போது காணி இல்லாத நிலை உருவாகியுள்ளதாக பறங்கி கமம் மக்கள் தெரிவிக்கின்றனர். மேலும் தங்கள் சொந்த பகுதியில் இல்லாமல் வெளிநாட்டில் இருந்து வந்தவர்களுக்கு எமது பகுதிக்கு அருகில் உள்ள காணிகளை வழங்குவதாகவும் இதனால் எங்கள் பிள்ளைகள் திருமணம் செய்து பிள்ளைகள் இருந்தும் அவர்களுக்கு ஒரு காணியை பெற முடியாத நிலை காணப்படுவதாகவும் குற்றம் சுமத்துகின்றனர்.

அதே நேரம் இலுப்பைகடவை மற்றும் கள்ளியடி பகுதியில் சட்ட விரோதமாக பல ஏக்கர் காணிகள் அடாத்தாக பிடிக்கப்பட்டு காடுகள் அழிக்கப்பட்டு வருவதாகவும் ஆதாரங்களுடன் மக்கள் குற்றம் சமத்துகின்றனர். எனவே விரைவில் உரிய அதிகாரிகள் நிறுவனங்கள் தலையிட்டு காணி தொடர்பான பிரச்சினைகளை தீர்த்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த காடழிப்பு மற்றும் காணி அபகரிப்பு தொடர்பாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் கேதீஸ்வரனிடம் வினவிய நிலையில் காடுகள் அழிக்கப்படும் விடயம் தொடர்பாக வனவள திணைக்களமே கவனம் செலுத்த வேண்டும் எனவும் தாங்கள் கணிகளுக்கோ காடழிப்புக்கோ எந்த அனுமதியும் வழங்கவில்லை எனவும் காடுகள் அழிக்கப்படும் இடங்களில் நபர்களை எச்சரித்தும் எச்சரிக்கை பதாதைகளை அழிக்கப்படும் இடங்களில் பிரதேச செயலகம் காட்சிப்படுத்தி உள்ளதாகவும் தெரிவித்தார்.

## சிறுமியின் உடல் சீல் வைக்கப்பட்டதால் வவுனியாவில் ஏற்பட்ட பரபரப்பு!

வவுனியா பொது வைத்தியசாலையில் மரணித்த சிறுமி ஒருவரின் சடலம் வைத்தியசாலையால் சீல் வைக்கப்பட்டமைக்கு வைத்தியசாலை நிர்வாகம் மீது உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ள நிலையில் சிறுமியின் நோய்க் காரணிகளை அடிப்படையாக வைத்தே சடலம் சீல் வைக்கப்பட்டதாக வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார்.

இவ் விடயம் தொடர்பாக தெரியவருவதாவது, பூணாவ பிரபோதகம கிராமத்தை சேர்ந்த 15 வயது சிறுமிக்கு நேற்று முன்தினம் (புதன்கிழமை) திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டதை அடுத்து வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சடலத்திற்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிக்கப்பட்ட நிலையில் சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

அன்றைய தினம் சடலத்திற்கான பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கை கொரோனா தொற்று இல்லை என கிடைக்கப்பெற்ற நிலையில் சடலத்தினை பொறுப்பேற்க சென்ற உறவினர்களிடம் சிறுமியின் சடலத்தினை திறக்க முடியாதவாறு சீல் செய்து வழங்கியுள்ளனர்.

இது தொடர்பாக உறவினர்கள் கருத்து தெரிவிக்கையில், சடலத்தினை பிரேத அறையில் வைத்திருந்த போது குளிரூட்டி செயற்படாமையால் சடலம் பழுதடைந்துள்ளது. இறுதியில் பிள்ளையின் முகத்தை கூட பார்க்க முடியாதவாறு செய்துவிட்டனர் என தெரிவித்தனர்.

எனினும் இவ் விடயம் தொடர்பாக வைத்தியசாலை பணிப்பாளரிடம் கேட்டபோது, சிறுமியின் மரணம் தொடர்பில் முழுமையான அவதானத்தை செலுத்தியிருந்தேன். அவரது உயிரை காக்க கடும் முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது பயனளிக்காது போய்விட்டது.

பி.சி.ஆர் அறிக்கை கொரோனா தொற்று இல்லை என்றே தெரிவித்திருந்தது. எனினும் அவரது நோய் நிலைகளை கேட்டதன் அடிப்படையில் அவரது மரணம் தொடர்பில் சந்தேகம் எழுந்தது. இவ்வாறான நிலையில் சமூக பாதுகாப்பை கருத்தில் கொண்டு சடலம் சீல் வைத்து வழங்கப்பட்டது.

இதேவேளை வவுனியா பொது வைத்தியசாலையின் பிரேத அறையின் அனைத்து குளிரூட்டி வசதிகளும் சிறப்பாக இயங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

## யானை தாக்கி 6 பிள்ளைகளின் தந்தையொருவர் உயிரிழந்துள்ளார்

மட்டக்களப்பு - இலுப்பட்டிச்சேனை பகுதியில் யானை தாக்கி 6 பிள்ளைகளின் தந்தையொருவர் உயிரிழந்துள்ளார்.

இதன் போது வண்ண மணி கிருஷ்ணமூர்த்தி என்பவரே இவ்வாறு யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.


குறித்த நபர் மரப்பாலம், தலப்புலாவெலி பகுதியில் வயலில் காவல் பார்த்துக்கொண்டிருந்த போதே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதன்போது உயிரிழந்தவரின் சடலம் செங்கலடி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனா மூன்றாம் அலையில் கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் சுமார் 10,000 பேருக்கு தொற்று

கொரோனா மூன்றாம் அலையில் கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.



கிழக்கு மாகாணத்தில் 211 கொரோனா நோயாளர்கள் கடந்த 24 மணித்தியாலங்களில் அடையாளங்காணப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் யு.சு.ஆ. தௌபீக் தெரிவித்துள்ளார்.

அன்று (26) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்த விடயங்களை தெரிவித்தார்.

நாட்டில் இதுவரை 2,49,926 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களில் 2,14,668 பேர் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

32,444 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனிடையே, நாட்டில் 2,862 பேர் கொரொனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.




# மீண்டும் தமிழுக்கு வரும் டாப்சி

பாலிவுட்டில் பிசியான நடிகையாக வலம்வரும் டாப்சி, அடுத்ததாக தமிழ் படம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளதாக கூறப்படுகிறது.

தனுஷ் ஜோடியாக ஆடுகளம் படத்தில் அறிமுகமாகி முன்னணி இடத்துக்கு வந்தவர் டாப்சி. பின்னர் காஞ்சனா-2, வந்தான் வென்றான், கேம் ஓவர், ஆரம்பம், வை ராஜா வை போன்ற படங்களில் நடித்த டாப்சி, பாலிவுட்டிலும் பிசியான நடிகையாக வலம் வருகிறார். தற்போது கிரிக்கெட் வீராங்கனை மித்தாலி ராஜ் வாழ்க்கை கதையை மையமாக வைத்து உருவாகும் 'சபாஷ் மித்து', தமிழில் ஜெயம் ரவியுடன் 'ஜன கண மன' உள்ளிட்ட சில படங்களை கைவசம் வைத்துள்ளார்.

இந்நிலையில், நடிகை டாப்சி மேலும் ஒரு தமிழ் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்தப் படத்தை, அருள்நிதி நடிப்பில் வெளியான 'கே 13' என்ற திரில்லர் படத்தை இயக்கிய பரத் நீலகண்டன் இயக்க உள்ளாராம். கதாநாயகிக்கு முக்கியத்துவம் தரும் கதையம்சம் கொண்ட படம் என்பதால், நடிகை டாப்சி இப்படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டதாக கூறப்படுகிறது. இப்படம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# தளபதி இல்லாமல் துப்பாக்கி திரைப்படத்தின் இரண்டாம் பாகம்!

இயக்குனர் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவான துப்பாகி திரைப்படம் இரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. பிளாக்பஸ்டர் ஹிட் ஆனது.

இந்நிலையில், துப்பாக்கி திரைப்படத்தின் இரண்டாம் பாகத்தை எடுப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதற்கான கதையை முருகதாஸ் தயார் செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஆனால் இதில் நடிகர் விஜய்கு பதிலாக கமல்ஹாசன் நடிக்கவுள்ளதாக சமூகவலைத்தளங்களில் தகவல் ஒன்று வைரலாகி வருகின்றது. இருப்பினும் குறித்த தகவல் இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



# முதல்வர் மகளாக நடிக்க ஓகே சொன்ன நயன்தாரா



தென்னிந்திய திரையுலகில் முன்னணி நடிகையாக இருக்கும் நயன்தாரா, அடுத்ததாக பிரபல நடிகரின் படத்தில் நடிக்க சம்மதம் தெரிவித்துள்ளாராம். மலையாளத்தில் மோகன்லால் நடித்து பிளாக்பஸ்டர் ஹிட்டான திரைப்படம் 'லூசிபர்'. இந்தியாவையே மிரள வைத்த இந்த படத்தில் மோகன்லால் அரசியல்வாதியாகவும், அண்டர்கிரவுண்ட் கேங்ஸ்டராகவும் நடித்திருந்தார். இதைத்தொடர்ந்து இந்த படத்தின் இரண்டாம் பாகம் தயாரிக்கும் பணிகளை துவங்கிவிட்டார் பிருத்விராஜ்.

தற்போது லூசிபர் படம் தெலுங்கில் ரீமேக் ஆகிறது. இதில் மெகா ஸ்டார் சிரஞ்சீவி நடிக்க இருக்கிறார். பிரபல இயக்குனர் மோகன் ராஜா இந்த படத்தை இயக்கவிருக்கிறார். சுமார் 200 கோடி ரூபாய் பட்ஜெட்டில் இப்படம் தயாராக உள்ளது. தற்போது இப்படத்தின் ஆரம்பக்கட்ட பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில், இப்படத்தில் நடிகை நயன்தாராவும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளார். மலையாளத்தில் மஞ்சு வாரியர் நடித்திருந்த முதலமைச்சர் மகள் கதாபாத்திரத்திற்கு, நயன்தாராவை தேர்வு செய்து உள்ளனர். இந்த கதாபாத்திரத்தில் நடிக்க நடிகை நயன்தாராவிடம், கடந்த சில மாதங்களாக பேச்சுவார்த்தை நடந்து வந்தது. தற்போது தான் அவர் சம்மதம் தெரிவித்துள்ளார்.

# தடுப்பூசி செலுத்திக்கொண்ட நட்சத்திர தம்பதி!

நடிகர் சூர்யா மற்றும் ஜோதிகா ஆகிய இருவரும் கொரோனா தொற்றுக்கான தடுப்பூசியின் முதல் டோஸை பெற்றுக்கொண்டுள்ளனர். சென்னை சாலி கிராமத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் கோவேக்சின் தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த பெப்ரவரி மாதம் நடிகர் சூரியாவுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# வலிமை திரைப்படத்தின் புதிய அப்டேட்!

வலிமை திரைப்படம் குறித்த அப்டேட்டை இரசிகர்கள் தொடர்ச்சியாக கேட்டுவந்த நிலையில், தற்போது இசையமைப்பாளர் யுவன் சங்கர் ராஜா இது குறித்த தகவலை பகிர்ந்துகொண்டுள்ளார். இது குறித்து தெரிவித்துள்ள அவர், வலிமை படத்தில் அறிமுக பாடல் எப்போதும் போல் பிரமிக்க வைக்கும் வகையில் இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் படத்தில் ஒரு அம்மா செண்டிமெண்ட் பாடல் இருப்பதாகவும் படத்தின் முதல் பாடலுக்கு கும்தா என பெயரிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நடிகர் அஜித் நடிப்பில் போனி கபூர் தயாரிப்பில் வலிமை திரைப்படம் உருவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




தொகுப்பு :– ஹாசினி




## எலுமிச்சை சாறை எப்படி உபயோகித்தால் தலைமுடி அடர்த்தியாக வளரும் தெரியுமா?

எலுமிச்சை பலவித நன்மைகளை உடலுக்கு தரும் அதனை உணவில் சேர்த்துக் கொள்வதால் இளமையாக இருக்கலாம் என கேள்விப்பட்டிருப்பீர்கள். எலுமிச்சையை தலைமுடிக்கு உபயோகப்படுத்தினால் பலவித நன்மைகளை தரும். ஆனால் அதன் பலன் முழுமையாக பெற எப்படி உபயோகிக்கலாம் என பார்க்கலாம்.

எலுமிச்சை சாறு அரை மூடி எடுத்து அதனுடன் சிறிது தயிர் கலந்து தலையில், தேய்த்து அரை மணி நேரம் கழித்து அலசினால் அரிப்பு நிற்கும்.

பிசுபிசுப்பான கூந்தலுக்கு : ஒரு முழு எலுமிச்சை சாறு எடுத்து அதனுடன் சிறிது பால் கலந்து தலையில் ஸ்கால்ப்பில் தடவுங்கள் அரை மணி நேரம் கழித்து தலைக்கு குளித்தால் செபேசியஸ் சுரப்பியில் அதிகபடியான எண்ணெய் சுரப்பது குறைக்கப்படும்.

பொடுகிற்கு : குளிர்காலத்தில் அதிகப்படியான பொடுகு உண்டாகும். அதற்கு பூஞ்சை தொற்றே காரணம். அதனை தடுக்க எலுமிச்சை சாறில் சிறிது நீர் கலந்து தலையில் தடவவும். காய்ந்ததும் தலைமுடியை அலசுங்கள். பொடுகு மாயமாகிவிடும்.

ஸ்ட்ரெயிட் ஹேர் குறிப்பிற்கு : சிலருக்கு கூந்தல் வளைந்தபடி இருக்கும். கூந்தலை நேராக்க தேங்காய் எண்ணெயுடன் எலுமிச்சை சாறு கலந்து தலைமுடியில் தேயுங்கள். 1 மணி நேரத்திற்கு பிறகு கூந்தலை அலசவும்.

கூந்தல் அடர்த்தியாக வளர : கூந்தல் அடர்த்தியாக வளர எலுமிச்சை ஸ்கால்ப்பில் செல்களை தூண்டும். ஆலிவ் எண்ணெய், விளக்கெண்ணெய் சம அளவு எடுத்து அதனுடன் ஒரு எலுமிச்சை பழச் சாறை பிழிந்து தலையில் ஸ்கால்ப்பிலிருந்து நுனி வரை தேய்க்கவும். 40 நிமிடங்கள் கழித்து குளிக்கவும். வாரம் இருமுறை செய்தால் அடர்த்தியாக முடி வளரும்.

முடி உதிர்தலுக்கு : ஒரு எலுமிச்சை பழச் சாறு 1 ஸ்பூன் சீரகப் பொடி 1 ஸ்பூன் மிளகுப் பொடி ஆகியவற்றை ஒன்றாக கலந்து தலையில் தேயுங்கள். நன்றாக காய்ந்ததும் தலைமுடியை அலசவும்.

கூந்தல் அழுக்கை அகற்ற : முடி உதிர்தல் மற்றும் கூந்தல் வளராமல் இருப்பதற்கு மிக முக்கிய காரணம் சரும துவாரங்களில் அழுக்கு தங்குவதால். எலுமிச்சை அழுக்கை அகற்றி ஸ்கால்ப்பை சுத்தமாக வைத்திருக்க உதவுகிறது





என்னுடைய
கவலைகளுக்கு
ஆயிரம்
காரணங்கள்
இருந்தாலும் என்
சந்தோஷத்திற்கு
ஒரே காரணம்
உன் நினைவுகள்
மட்டுமே!!!!

## ஒரே இரவில் முகப்பொலிவை அதிகரிக்கணுமா?

யாருக்கு தான் அழகான, பிரகாசமான சருமம் வேண்டுமென்ற ஆசை இருக்காது. சருமத்தின் பொலிவை அதிகரிக்க நம்மில் பலர் கடைகளில் விற்கப்படும் பல அழகு சாதனப் பொருட்களைப் பயன்படுத்தியிருப்போம். ஆனால் கெமிக்கல் கலந்த அழகு சாதனப் பொருட்கள், சருமத்திற்கு தற்காலிக பொலிவைக் கொடுக்குமே தவிர, சரும செல்களின் ஆரோக்கியத்தை மெதுவாக அழித்துக் கொண்டிருக்கும். அதனால் தான் தினமும் மேக்கப் போடுபவர்களை, ஒருநாள் மேக்கப் போடாமல் பார்த்தால், அவர்களது சருமம் சுருக்கத்துடனும், பொலிவின்றியும் காணப்படுகிறது. அதுவே இயற்கைப் பொருட்களால் சருமத்திற்கு பராமரிப்புக்களைக் கொடுத்து வந்தால், சரும செல்கள் ஆரோக்கியமாகவும், சருமம் எப்போதும் பிரகாசமாகவும் காணப்படும். உங்கள் முகம் பொலிவிழந்து காணப்படுகிறதா? கண்ணாடியைப் பார்த்தாலே முகம் பிரகாசம் இழந்து அசிங்கமாக காட்சியளிக்கிறதா? உங்கள் முகப் பொலிவை அதிகரிக்க கண்ட கண்ட க்ரீம்களை உபயோகிக்கிறீர்களா? இருப்பினும் எந்த பலனும் கிடைக்கவில்லையா? அப்படியானால் பின்வரும் இயற்கை வழிகளை முயற்சித்துப் பாருங்கள். குறிப்பாக இந்த வழிகளை இரவு நேரத்தில் பின்பற்றினால், மறுநாள் காலையில் முகம் பளிச்சென்று புத்துணர்ச்சியுடன் காணப்படும்.

பாதாம் எண்ணெய் மசாஜ் இரவு தூங்கும் முன் சோப்பு அல்லது ஃபேஷ் வாஷ் பயன்படுத்தி முகத்தில் உள்ள அழுக்கை நீக்கிய பின், ரோஸ் வாட்டர் பயன்படுத்தி முகத்தை துடைத்து, அதன் பின் சில துளிகள் பாதாம் எண்ணெயை முகத்தில் தடவி மென்மையாக சிறிது நேரம் மசாஜ் செய்ய வேண்டும். இப்படி இரவு தூங்கும் முன் தினமும் செய்து வந்தால், பொலிவிழந்து இருக்கும் முகம் பொலிவு பெற்று அழகாக காணப்படும். தேங்காய் எண்ணெய் நம் அனைவரது வீட்டிலும் பொதுவாக பயன்படுத்தப்படும் தேங்காய் எண்ணெய் தலைமுடிக்கு மட்டும் நல்லதல்ல, சரும பொலிவை அதிகரிக்கும் திறனையும் கொண்டது. எனவே சருமத்திற்கு கெமிக்கல் கலந்த மாய்ஸ்சுரைசர் பயன்படுத்துவதற்கு பதிலாக, தேங்காய் எண்ணெயைப் பயன்படுத்தி சருமத்தை மசாஜ் செய்யுங்கள். இது சரும பொலிவை அதிகரிக்க உதவுவதோடு, அதில் உள்ள ஆன்டி–பாக்டீரியல் பண்புகள் ஒட்டுமொத்த சரும ஆரோக்கியத்தையும் மேம்படுத்த உதவும்.

பால் ஃபேஸ் பேக் காய்ச்சாத பச்சை பால் சருமத்தில் மாயங்களை ஏற்படுத்தும். குறிப்பாக இது சருமத்தில் உள்ள கருமையைப் போக்கும். எனவே நீங்கள் உங்கள் சரும நிறத்தை அதிகரிக்க நினைத்தால், இரவு தூங்கும் முன் முகத்தை கழுவிய பின்பு, பச்சை பாலை முகத்தில் தடவி மென்மையாக மசாஜ் செய்து, இரவு முழுவதும் ஊற வைத்து, பின் மறுநாள் காலையில் முகத்தைக் கழுவுங்கள். இதனால் உங்கள் முகம் பொலிவோடு பளிச்சென்று காணப்படும்.

கற்றாழை ஜெல்:– கற்றாழை ஜெல் ஒரு அற்புதமான மாய்ஸ்சுரைசர். தினமும் இரவு தூங்கும் முன் கற்றாழை ஜெல்லை முகத்தில் தடவி மசாஜ் செய்து, இரவு முழுவதும் ஊற வைத்து மறுநாள் காலையில் முகத்தைக் கழுவினால், சருமம் மென்மையாக இருப்பதோடு, பளிச்சென்று பிரகாசமாகவும் காட்சியளிக்கும்.

கிளிசரின் மற்றும் எலுமிச்சை :– சிறிது கிளிசரினுடன் சில துளிகள் எலுமிச்சை சாற்றினை சேர்த்து கலந்து, சருமத்தில் தடவி மென்மையாக மசாஜ் செய்யுங்கள். இதனால் கிளிசரின் சருமத்திற்கு நீரேற்றம் அளிக்கும் மற்றும் எலுமிச்சை சாறு சருமத்தில் உள்ள கருமையைப் போக்கி, சருமத்தை பொலிவாக வெளிக்காட்டும். வேண்டுமானால் முயற்சித்துப் பாருங்கள்.

தேன் மற்றும் முல்தானி மெட்டி:– உங்கள் முகம் பொலிவிழந்து அசிங்கமாக காணப்படுகிறதா? அப்படியானால் முல்தானி மெட்டி மற்றும் தேன் ஃபேஸ் பேக் போடுங்கள். அதற்கு முகத்தை முதலில் நீரில் கழுவி உலர வைத்து, பின் முல்தானி மெட்டியை தேன் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 20–30 நிமிடம் ஊற வைத்து, பின் கழுவ வேண்டும். இந்த மாஸ்க்கை இரவு தூங்கும் முன் போட்டால், காலையில் உங்கள் முகம் பிரகாசமாக காட்சியளிக்கும்.

ரோஸ் வாட்டர், சந்தன பவுடர் மற்றும் மஞ்சள் :– சருமத்தின் பொலிவை அதிகரிக்க இரவு தூங்கும் முன் ஃபேஸ் பேக்கை போடுவது ஒரு சிறந்த வழி. அதுவும் மஞ்சள் தூள், சந்தன பவுடர் மற்றும் ரோஸ் வாட்டர் ஆகியவற்றை ஒன்றாக கலந்து, முகத்தில் தடவி 20–30 நிமிடம் ஊற வைத்து, பின் நீரால் முகத்தைக் கழுவ வேண்டும். அதன் பின் ரோஸ் வாட்டரால் முகத்தை ஒருமுறை துடைத்திடுங்கள். மறுநாள் காலையில் முகத்தை கண்ணாடியில் பார்த்தால், முகம் பளிச்சென்று இருக்கும்.



தொகுப்பு :– ஹாசினி

# அப்துல் கலாம் பொன்மொழிகள்

1. அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகிறது. அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கிறது. அதிகம் செயல்படுபவனையே கைகூப்பித் தொழுகிறது.

2. கற்ற அறிவையும், பெற்ற செல்வத்தையும் இறுதிக் காலம் வரை மற்றவர்களுக்காகச் செலவிடுங்கள்.

3. நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு நம்மை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

4. நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான்.

5. சலித்துக் கொள்பவன் ஒவ்வொரு வாய்ப்பிலும் உள்ள ஆபத்தைப் பார்க்கிறான். சாதிப்பவன் ஒவ்வொரு ஆபத்திலும் உள்ள வாய்ப்பினைப் பார்க்கிறான்.

6. மகிழ்ச்சி என்ற உணர்ச்சி மட்டும் இல்லாவிட்டால் வாழ்க்கை என்பது சுமக்க முடியாத பெரிய சுமையாகியிருக்கும்.

7. உலகம் ஒரு விசித்திரமான கல்லூரி. இங்கே பாடம் சொல்லிக்கொடுத்துத் தேர்வு வைப்பது இல்லை. தேர்வு வைத்த பிறகே பாடம் கற்பிக்கப்படுகிறது.

8. சிக்கனம் என்பது ஒருவன் பணத்தை எவ்வளவு குறைவாகச் செலவு செய்கிறான் என்பதைப் பொறுத்தது அல்ல. அதை அவன் எவ்வளவு உபயோகமாகச் செலவிடு கிறான் என்பதைப் பொறுத்தது ஆகும்.

9. எதை இழந்தீர்கள் என்பதல்ல முக்கியம். என்ன மிச்சம் இருக்கிறது என்பதே முக்கியம்.

10. அரிய சாதனைகள் அனைத்தும் வலிமையினால் செய்யப்பட்டவை அல்ல விடாமுயற்சியினால் தான்.

11. முன்நோக்கி செல்லும் போது கனிவாயிரு. ஒருவேளை பின்நோக்கி வரநேரிட்டால் யாராவது உதவுவார்கள்.

12. ரகசியத்தை வெளிப்படுத்தியவனுக்கும், துக்கத்தை வெளிப்படுத்தாதவனுக்கும் மனதில் நிம்மதி இருக்காது.

13. எல்லோரையும் நம்புவது அபாயகரமானது. ஒருவரையும் நம்பாமல் இருப்பது இன்னும் அபாயகரமானது.

14. எல்லாத் துன்பங்களுக்கும் இரண்டு மருந்துகள் உள்ளன. ஒன்று காலம். இன்னொன்று மௌனம்.

15. எல்லோரும் தம்மை விட்டு விட்டு வேறுயாரையோ சீர்திருத்த முயலுகிறார்கள்.

16. ஆசையில்லாத முயற்சியால் பயனில்லை. முயற்சியில்லாத ஆசையால் பயனில்லை.

17. செயல் புரியாத மனிதனுக்கு தெய்வம் ஒருபோதும் உதவி செய்யாது.
18. சண்டைக்குப் பின் வரும் சமாதானத்தைவிட, என்றும் சண்டையே இல்லாத சமாதானம் தான். வேண்டும்.

19. நேற்றைய பொழுதும் நிஜமில்லை நாளைய பொழுதும் நிச்சயமில்லை இன்றைக்கு மட்டுமே நம் கையில்.

20. மகிழ்ச்சியாய் நீ வீணாக்கிய தருணங்களெல்லாம் வீணானவையல்ல.


21. பழமையைப் பற்றி ஒன்றுமே தெரியாமல் புதுமையைச் சிறப்பாகப் படைக்க முடியாது.

22. வாசிப்புப் பழக்கம் என்பது அருமையான ருசி. அழகான பசி. ஒரு முறை சுவைக்கப் பழகிவிட்டால் அது தொடர்ந்து வரும்.

23. நீங்கள் விரும்புவது ஒருவேளை உங்களுக்கு கிடைக்காமல் போகலாம். ஆனால் உங்களுக்கு தகுதியானது உங்களுக்கு கண்டிப்பாக கிடைத்தே தீரும்.

24. அறிவு ஒன்றுதான் அச்சத்தை முறிக்கும் அரிய மருந்து. அறிவை வளர்த்துக் கொண்டால் எல்லாவிதமான பயங்களும் அகன்றுவிடும்.

25. தவறு நேர்ந்து விடுமோ என்று அஞ்சி அஞ்சி எந்த செயலையும் செய்யாமல் பின் வாங்குவது இழிவானது.




## உத்வேகமூட்டும் விவேகானந்தர் பொன்மொழிகள்

## (Inspirational Vivekananda quotes)

1. அடக்கப்படாமல் உள்ள மனமும், அறவழியில் செலுத்தப்படாத மனமும் நம்மை எப்போதும் கீழ் நோக்கியே இழுத்துச் சென்று அழித்துவிடும். அடக்கப்பட்ட மனமும், அறவழியில் செல்லும் மனமும் நமக்குப் பாதுகாப்பை அளித்திடும். உலகபந்தங்களில் இருந்து விடுதலையளிக்கும்.

2. எல்லாப் பெருமையையும், எல்லா ஆற்றலையும், எல்லாத் தூய்மையையும் ஆன்மா தூண்டுகிறதே தவிர, ஆன்மாவைத் தூண்டுவது எதுவும் இல்லை.

3. ஆயிரம் ஆண்டுகள் கங்கையில் நீராடிய போதிலும் சரி, அல்லது ஆயிரம் ஆண்டுகள் காய்கறி உணவையே உண்டு வந்தாலும் சரி, உன்னுள்ளே இருக்கும் ஆன்மிகம் விழிப்படையாவிட்டால், அதனால் ஒரு பயனும் இல்லை.

4. மக்களுக்கு சேவை செய்யும் தொண்டே மகேசனுக்குச் செய்யும் தொண்டு நாத்திகனுக்கு தருமசிந்தனை இருக்கலாம். ஆனால் மதகோட்பாடு இருக்க இயலாது. மதத்தில் நம்பிக்கை வைத்தவனுக்கு தருமசிந்தை அவசியம் இருக்க வேண்டும்.

5. கபடம் இல்லாத நாத்திகன் வஞ்சகனை விடச் சிறந்தவன் ஆவான். காமம், பொன்னாசை இவைகளால் ஆளப்படும் அற்பர்கள் பொருட்படுத்தப்படக்கூடியவர்கள் அல்லர்.

6. நமக்குப் பல அனுபவங்களை பெற்றுத்தர இந்த உலகம் படைக்கப்பட்டது. இங்கிருக்கும் ஒவ்வொரு பொருளும் நம்மால் அனுபவிக்கப் பட வேண்டியது என்பதில் சந்தேகமில்லை. அதற்காக அது வேண்டும், இது வேண்டும் என யாரிடமும் கேட்காதே. வேண்டுதல் ஒரு பலவீனமாகும். இந்த வேண்டுதல்தான் நம்மை பிச்சைக்காரர்களாக்குகிறது. நாம் அனைவரும் ராஜகுமாரர்கள். பிச்சைக்காரர்கள் அல்ல.

7. கோபத்தில் ஒருவரை ஒரு அடி அடித்துவிடுவது எளிது. ஆனால் எழும் கையை தாழ்த்தி மனதைக் கட்டுப்படுத்தி அமைதியாய் இருப்பது கடினமான செயல். இந்த கடினமான செயலைத்தான் நீ பழகிக்கொள்ள வேண்டும்.

8. ஏதாவது தவறு செய்துவிட்டால், ஐயோ! நான் தீயவன் ஆகிவிட்டேனே!" என்று வருத்தப்பட வேண்டாம். நீ நல்லவன்தான். ஆனால், இன்னும் உன்னை நல்லவனாக்க முயற்சி செய்ய வேண்டும்.

9. மனிதனை உருவாக்குவதில் இன்பமும் துன்பமும் சமபங்கு வகிக்கின்றன. சில நேரங்களில் இன்பத்தை விட துன்பமே மனிதனுக்கு சிறந்த ஆசானாக அமைகிறது. நன்மையைப் போல் தீமையில் இருந்தும் மனிதன் பாடம் கற்றுக்கொள்கிறான்.

10. உதவி செய், சண்டை போடாதே. ஒன்றுபடுத்து, அழிக்காதே. சமரசமாய் இரு, சாந்தம் கொள். வேறுபாடு காட்டாதே.

## சமுதாயத்திற்கு விவேகானந்தரின் பொன்மொழிகள்

## (Vivekananda quotes for society)

11. தீமையை எதிர்க்காதீர்கள், அகிம்சையே மிக உயர்ந்த ஒழுக்க லட்சியம் என்று ஆச்சாரியார்கள் உப தேசித்து இருக்கிறார்கள். இந்த உபதேசத்தை நம்மில் சிலர் அப்படியே கடைப்பிடிக்க முயல்வோமானால் சமுதாய அமைப்பே இடிந்து தூள் தூளாகி விடும்!

12. அயோக்கியர்கள் நம் சொத்துக்களையும் நம் வாழ்க்கையையும் பறித்துக் கொண்டு தங்கள் விருப்பப்படி நம்மை ஆட்டி வைப்பார்கள். இது நமக்குத் தெரியும். இத்தகைய அகிம்சை சமுதாயத்தில் ஒரேயொரு நாள் கடைப்பிடிக்கப்பட்டாலும் கூட பெரும் நாசமே விளைவாக இருக்கும்.

13. எவர் ஒருவருடைய நெஞ்சு ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ, அவரையே நான் மகாத்மா என்பேன். அன்பு நெறியிற் சென்று உலகம் உய்வடைந்திட வழிகளைக் கூறும் முறை மதம் எனப்படும்.

14. இவ்வுலகில் பிறந்த நீங்கள் அதற்கு அடையாளமாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். இல்லையேல் உங்களுக்கும் மரங்கள் கற்களுக்கும் வேறுபாடு இல்லாமற் போய்விடும்.

15. வலிமையின்மையே ஒருவனின் துன்பத்திற்கு காரணம். நாம் பலவீனமாக இருப்பதாலேயே பொய்யும் திருட்டும் ஏமாற்று வேலைகளும் இன்னும் நம்மை விட்டு அகலவில்லை.

16. உலகில் உள்ள மக்கள் உன்னை புகழ்ந்தாலும் சரி இகழ்ந்தாலும் சரி நீ. உண்மை என்னும் பாதையிலிருந்து அனுவளவேனும் பிறழாமல் கவனமாக இருக்க வேண்டும்

17. மனிதப் பிறவிதான் பிரபஞ்சத்திலேயே மிகச் சிறந்ததாகும் எல்லா மிருகங்களைக் காட்டிலும் எல்லாக் தேவர்களைக் காட்டிலும் மனிதர்களே உயர்ந்தவர்கள். மனிதர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் யாரும் இல்லை.

18. பணம் மட்டுமே வாழ்க்கையல்ல அதையும் தாண்டி மனிதன் அடைய வேண்டிய அனுபவங்கள் பல உள்ளன. மன நிம்மதி அன்பு தவம் தியானம் முதலிய குணங்கள் எல்லாம் பணத்தால் வருபவை அல்ல.

19. மற்றவர்களின் தெய்வீக இயல்பை வெளிப்படுத்த உதவி செய்வது தான். நம்முடைய தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழியாகும்.

20. உடல் பலவீனத்தையோ, மன பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அனுகக் கூடாது! நமது சமுதாயம் இப்போது இருக்கும் தாழ்ந்த நிலைமைக்கு மதம் காரணம் அல்ல. மதத்தை முறையாகப் பின்பற்றாமல் போனதுதான் சமுதாயத்தின் வீழ்ச்சிக்குக் காரணம்.

# கத்தியில்லாமல்... ரத்தமில்லாமல்...!



"என்ன ஜெகன், உன் கதையெல்லாம் எப்படி போய்க்கிட்டு இருக்கு?"

"ஏதோ எழுதிக்கிட்டு இருக்கேன். என்னையும் ஒரு எழுத்தாளர் அப்படீன்னு பத்திரிகை உலகம் ஏத்துக்கிட்டு இருக்குது அக்கா."

"இதுவரை எத்தனை சிறுகதை வெளிவந்திருக்கிறது?"

"ம்.... அது இருக்குது. சுமார் முப்பத்தஞ்சு இருக்கும். இப்போ நான் வழக்கமா எழுதுற பத்திரிகையிலே இருந்து தொடர்கதை எழுதி தர முடியுமான்னு கேக்கிறாங்க. அதிலே என் பிரண்ட் பிரபாகர்தானே கதை செலக்ட் பண்ற பிரிவிலே இருக்கான். நேத்து பேசினான். நல்ல கிராமத்து கதையா எழுதுடா? தொடரா போட்டுடலாம்னான். எனக்கு நம்ம வீட்டு நெருக்கடி, அடிக்கடி வாசல் முன்னே போற வாகன சத்தம் இதிலே எல்லாம் அமைதியா எங்கே எழுத முடியுது?"

"அப்போ எங்க ஊருக்கு வாயேன். அமைதியா இருந்து எழுதலாம். உன் மருமகனும், மருமகளும் ஸ்கூலுக்கு போயிடுவாங்க. அத்தானும் அபீசுக்கு போயிடுவார். அந்த ஊர் சூழ்நிலை அப்படியே உனக்கு கதை எழுதுறதுக்கு ஏற்றதா இருக்கும்."

"அப்படிங்கறே? ..ம்... அந்த ஊர் அமைதியானது தான் அதிலும் உன் வீடும், அதன் பின்னே பரந்து கிடக்கும் தோட்டம், தென்னை மரங்கள், பக்கத்திலே சலசலத்து ஓடும் ஆறு இதெல்லாம் இயற்கையின் அழகு தான். கிழக்கே அழகான தாமரைக்குளம், ஊருக்கு நடுவே பெரிய கோயில், கோபுரம், தெப்பக்குளம்...ம்... சரி, நாளைக்கு நீ போகும் போது நானும் உன் கூடவே வர்றேன்."

மறுநாள் ஜெகன் பேப்பர், பேனா, ரைட்டிங் பேடு சகிதம் தன் அக்காள் பெமிலியோடு கிளம்பினான். ஒப்பீசுக்கு மூணு நாள் லீவு இருந்தது. ஞாயிறு லீவு நாள், திங்கள் சரஸ்வதி பூஜை, செவ்வாய் ஆயுத பூஜை. மூணு நாள் மொத்தமாக லீவு. எவ்வளவு எழுத முடியுமோ அவ்வளவு எழுதிடலாம்.

மாடியில் கனகா அவனுக்கென்று ஒதுக்கின அறையில் உட்கார்ந்து எழுத தொடங்கினான். தென்னை மரக்காற்று 'ஜிலு ஜிலு'வென வீசி தாலாட்ட தூக்கம் தான் வந்தது. ஒரு பக்கம் கூட எழுத முடியவில்லை. கண்ணை சொக்கியது. எழுந்து சிறிது உலாவினான். ஜன்னல் பக்கம் வந்த போதுதான் கவனித்தான் - தோட்டத்தில் ஒரு பெண். அழகு என்றால் அப்படி ஒரு அழகு. கிராமத்து அழகு. இரண்டு ஆட்டுக் குட்டிகளை இழுத்துக் கட்டினவள் அடுத்து, கனகாவுக்கு உதவியாக அடுப்படி வேலைகளை கவனிக்க சென்றாள்.

அக்காள் மகன் அருணிடம் கேட்டான், "யாரிவள்?"

"தோட்ட வேலை செய்வாருல்லே, கந்தசாமி. அவரோட பொண்ணு செல்வி. பத்தாவது வரை படிச்சிருக்கா. நம்ம தோட்டத்திலே நிறைய செடிகொடி வளர்ந்து கெடக்குதில்லே. ஆடும் மேய்ப்பா. அம்மாவுக்கு உதவியா பாத்திரம் தேய்ச்சு, துணியும் துவைச்சு கொடுப்பா..."

மறுபடியும் சிறிது நேரத்திற்கு பிறகு ஜன்னல் பக்கம் வந்த போது தான் கவனித்தான் ஜெகன். தோட்டத்தின் ஒரு பக்கத்தில் செடி-கொடி, மரங்கள் அடர்ந்த பகுதியில் செல்வி ஆடு மேய்த்துக் கொண்டிருக்க, முள்வேலிக்கு பின் பக்கம் வாட்டசாட்டமான ஒரு வாலிபன், அக்கம் பக்கம் பார்த்த அவன் பேண்ட் பாக்கெட்டில் இருந்த ஒரு கடிதத்தை எடுத்து அவளிடம் கொடுத்தான். அவளும் அக்கம் பக்கம் பார்த்தபடி அதை வாங்கினவள், ஜாக்கெட்டில் லெட்டரை பத்திரப்படுத்தினாள். இருவருமே மாடியில் நின்றிருந்த ஜெகனை கவனிக்கவில்லை. ஜெகனின் உதட்டில் ஒரு புன்சிரிப்பு. பட்டணத்தில் செல்போனில் காதல் வளருது. இந்த ஊர் அந்த அளவுக்கு முன்னேறவில்லை என்று நினைத்தபடி எழுத உட்கார்ந்தான். இப்போது அவனது கற்பனையில் கதையின் கரு மட்டுமல்ல, முழுக் கதையுமே உருக்கொண்டு எழுத தூண்டியது. எழுத ஆரம்பித்தான். இரவு, பகலாக எழுதினான். அழகான கிராமத்து காதல் கதை ஒன்று உருப்பெற்று, உயிர் பெற்று அவனது எழுத்தில் உலாவ ஆரம்பித்தது.

லீவு சமயங்களில் அக்கா வீட்டுக்கு வந்துவிட்டால் ஏராளமான கதைகள் எழுதலாம் போல இருக்கே என்று நினைத்தவன் நிறையவே எழுதி குவித்தான். அடிக்கடி ஜன்னல் பக்கம் வந்து பார்ப்பான். அங்கே தோட்டத்தில் கற்பனையில் இல்லாத காதல் காவியம் ஒன்று அம்பிகாபதி - அமராவதி ரேஞ்க்கு முன்னேறிக் கொண்டிருந்தது. அவனது மனதுக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது. பையன் யார் என்று அருணிடம் விசாரித்தான்.

ஊர் தலைவர் பரமார்த்த லிங்கத்தோட ஒரே மகன். காலேஜில் படித்து முடித்து விட்டு வேலை தேடிக் கொண்டிருக்கிறான் என்று அருண் சொன்னபோது ஜெகன் மனதில் ஒரு சின்ன நெருடல். கோடீஸ்வரர் பரமார்த்த லிங்கத்தின் ஒரே மகன் விவேக்குக்கும், தோட்ட வேலை செய்கிற கந்தசாமியின் மகள் செல்விக்கும் ஏற்பட்டிருக்கிற இந்த காதல் எப்படி கைகூட போகிறது என மனதுக்குள் ஏற்பட்ட சங்கடமான கேள்வி இது.

கதையை தொடர்ந்து எழுத முடியவில்லை. தன் நண்பன் சங்கரிடம் சொல்லி ரெண்டு நாட்கள் ஒப்பீஸிற்கு லீவு சொன்னான். மறுநாள் அருண் வந்து சொன்ன செய்தி ஜெகன் மனதை துடிக்கச் செய்தது. செல்வியையும், கந்தசாமியையும் விவேக்கின் தந்தை அழைத்து அவரது தோட்டத்தில் அடைத்து வைத்து அடித்ததாக சொன்னபோது ஏனோ மனது சங்கடப்பட்டது. அதுமட்டுமல்ல, அந்த இளம் ஜோடிகளுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்றும் மனது பரபரத்தது.

விவேக்கிடம் அவன் தந்தை, செல்வியை இனிமேல் சந்திக்கக் கூடாது என்றும், அதையும் மீறி சந்தித்தால் அவர்கள் இருவரையும் தீர்த்து கட்டிவிட போவதாகவும் சொன்னதை பலர் கேட்டனர். கனகா வந்து தன் தம்பி ஜெகனிடம் சொல்லி வருத்தப்பட்டபோது மனது வலித்தது. சே... காதலுக்கு எந்த காலத்திலேயும் எதிர்ப்புதானா என்று நினைக்கத் தோன்றியது. அவன் மனதும் சரியில்லாமல் போனது. இங்கே எதற்கு வந்தோம் என்று எண்ணினான். பாதியில் நின்ற கதையை எழுதக்கூட தோன்றவில்லை. எழுத வேண்டும் என்று உட்கார்ந்தால் அந்த கள்ளம் கபடமில்லாத பெண் செல்வியின் முகமும், அந்த இளைஞன் விவேக்கின் முகமும் தான் அவன் கண்முன்னே வந்து நின்றதே தவிர, மனதில், எண்ணத்தில், சிந்தனையில் கதை வரவில்லை.

ஆற்றங்கரையோரம் மாலை நேரம் அருணையும் அழைத்துக்கொண்டு காலார நடந்தான் ஜெகன்.

"அருண், இப்போ நீ டென்த் படிக்கிறதால நல்லா படிக்கணும். இப்போ இந்த வகுப்பிலே கிடைக்கிற மார்க்குதான் உன் எதிர்காலத்தையே நல்லபடியா உருவாக்கும்."

"சரி மாமா, நல்லா படிப்பேன், மாமா.... அதோ விவேக் அண்ணன் உட்கார்ந்திருக்கார்." ஆற்றங்கரை படிக்கட்டில் எங்கேயோ பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். அவனது பார்வையில் ஏதோ ஓர் இயலாத தன்மையே இருந்தது.

"விவேக்" என ஜெகன் அழைக்க, திரும்பி பார்த்தவன், முன்னே பின்னே அறிமுகம் இல்லாத இவர் யார் என்று நினைத்தபடியே,

"சார் நீங்க....?" என்றான்.

"விவேக் அண்ணா, எங்க மாமாதான் இவர்."

"ஓ.... கனகா அக்காவோட தம்பியா நீங்க! நீங்க ஒரு பெரிய எழுத்தாளருன்னு அக்கா சொல்லி இருக்காங்க. இன்னைக்குத்தான் நேர்ல பார்க்கிற சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு..."

"விவேக், என்னைப் பற்றிப் பேசுவது இருக்கட்டும், உங்களைப் பற்றி இப்போ பேசுவோம்."

"என்னை பற்றியா...? என்னைப் பற்றிப் பேச என்ன இருக்கு?"

"விவேக், உங்களைப் பற்றியும், செல்வி மேல் நீங்க வைத்திருக்கும் காதலைப் பற்றியும் எனக்குத் தெரியும். நீங்க அவளோடு வாழ விரும்புறீங்கதானே?"

"ம்.... அவ இல்லேன்னா எனக்கு வாழ்க்கையே இல்லை. நான் எப்படி அவ கூட வாழப் போறதுன்னுதான் யோசிச்சுக்கிட்டு இருக்கேன். ஒரு வழியும் தெரியலே"

"விவேக், நான் வழி காட்டட்டுமா?"

"ப்ளீஸ் சார், அப்படி எனக்கு நீங்க ஒரு வழி காட்டினா, நான் உங்களுக்கு ஒரு கோயில் கட்டி காலம் முழுவதும் கும்பிடுவேன்."

"சரி விவேக், அப்புறமா எனக்கு கோயில் கட்டுங்க. இப்போ நான் சொல்றபடி கேளுங்க."

அன்று அப்போதே தன் நண்பன் சங்கரை அவன் காரில் ஊருக்கு வெளியே வரச்சொல்லி, இரவு செல்வியை அந்த காரில் ஏற்றி தன் வீட்டிற்கு அனுப்பி வைத்தான் ஜெகன். அவள் தந்தை கந்தசாமி ஜெகன் சொல்லிக் கொடுத்தபடி மறுநாள் அழுது புலம்பினார். "பரமார்த்த லிங்கம் என் மகளை என்னமோ செய்து விட்டார். எங்களை தீர்த்து கட்டிடுவேன்னு சொன்னார். சொன்னபடியே என் மகளை கொன்னு ஆத்திலேயோ, குளத்திலேயோ வீசிவிட்டார்" என்று ஊரெல்லாம் சொல்லி சொல்லி அழுதார். ஆற்றங்கரை எங்கும் அவளைத் தேடி அலைந்தார். குளத்தில் ஆட்களை வைத்து தேடினார். பைத்தியம் பிடித்தவர் போல், 'செல்வி, செல்வி' என்று அலைந்தார். அவள் உடல் கூட கிடைக்கவில்லை. இந்த நாடகம் அந்த கிராம மக்களின் அனுதாபத்தை கந்தசாமிக்கும், வெறுப்பை பரமார்த்த லிங்கத்திற்கும் பெற்றுத் தந்தது.

அடுத்த காயை நகர்த்தினான் ஜெகன்.

மறுபடியும் அன்று இரவு சங்கரை வரச்சொல்லி கந்தசாமியை அழைத்து தன் வீட்டில் கொண்டு போய் விடச் சொன்னான். மறுநாள் கந்தசாமியை காணாத ஊர்மக்கள் மகளை பிரிந்த சோகத்தில் அவர் ஆற்றில் விழுந்து தற்கொலை பண்ணியிருக்கலாம், இல்லேன்னா பரமார்த்த லிங்கம் அவரையும் தீர்த்துக்கட்டியிருக்கலாம் என்றனர். பரமார்த்த லிங்கத்தை திட்டி தீர்த்தனர். இரண்டு உயிர் போக காரணமாக இருந்த, அவரும் அவர் குடும்பத்தினரும் நாசமாகத்தான் போவார்கள் என்று கந்தசாமியின் உறவினர்கள் பேசினர்.

அடுத்த காயை நகர்த்தினான் ஜெகன்.

குடிகாரனாக, பைத்தியம் பிடித்தது போல் விவேக் நடுரோட்டில் விழுந்து கிடந்ததாக ஆட்கள் தூக்கிக் கொண்டு வந்தனர். தன் ஒரே மகனை அந்த கோலத்தில் கண்ட அவன் தாய்க்கு நெஞ்சு வலியே வந்துவிட்டது. படுத்த படுக்கை ஆனாள். தண்ணீர் குடிக்க கூட மறுத்தாள். ஊண், உறக்கம் மறந்த விவேக், தன் தந்தையின் கண்முன் காதில் கேட்கும்படி 'செல்வி, செல்வி' என்று அழுது புலம்பினான்.

பரமார்த்த லிங்கம் நிலைகுலைந்து போனார். செல்வியையும், அவளது தந்தையையும் அவர்தான் ஏதோ செய்து விட்டார் என்று அரசல்புரசலாக பேசின ஊர் மக்கள், இப்போது ரடியாகவே பேச ஆரம்பித்து விட்டனர்.

ஒரு பக்கம் ஊராரின் ஏச்சும், பேச்சும் இன்னொரு பக்கம் அவரது மனைவி பசி, பட்டினியோடு கட்டிலில் முடங்கிப் போனது, போதாக்குறைக்கு விவேக்கின் குடிகார நிலை, எப்போதும் டிப்டாப்பாக அலைபவன் இப்படி ஒரு சூழ்நிலைக்கு தள்ளப்பட்டது, இத்தனையும் தன்னால்தான் என்கிற குற்ற உணர்வோடு தன் நிம்மதியை இழந்தார்.

"சே... நான் தப்பு செய்துவிட்டேன். இருவர் மரணத்துக்கும் காரணமாகிவிட்டேன். ஊரார் முன் மதிப்பாக இருந்தவன் இப்போது என் மதிப்பையும் இழந்துவிட்டேன். எப்போதும் சந்தோஷமாக இந்த பெரிய வீட்டில், இடுப்பில் சாவிக்கொத்தை மாட்டிக் கொண்டு வளைய வளைய வந்த என் மனைவி கண்மணி முடங்கி விட்டாள். என் நிலைமை இத்தனை மோசமாக ஆகிவிடும் என்று கனவில் கூட நான் நினைக்கவில்லையே? சே.... இந்த பாழா போன காதலால் என் குடும்பமே சீரழிஞ்சு போச்சே?..." என்று தன் நண்பன் கோவிந்தனிடம் சொல்லி புலம்பினார்.

"உன்னால ரெண்டு உயிர் போச்சே? செல்வியும், அவள் தகப்பனும் செத்துப் போயி மூணு நாளாச்சு. இன்னும் பொணம் கூட கிடைக்கலே. இந்த பரந்து விரிந்த ஆற்றில், ஓடும் வெள்ளத்தில் பொணம் எங்கே போய் கரை ஒதுங்குதோ? அப்படி ஒதுங்கினா பொலீஸ் விசாரணையில் முதல் குற்றவாளின்னு உன்னைத்தான் கைது செய்வாங்க. ஏன்னா, நீ அவங்கள தோட்டத்தில் அடைச்சு வச்சு அடிச்சது, ரெண்டு பேரையும் தீர்த்து கட்டிடுவேன்னு சொன்னது எல்லாத்தையும் உன் வீட்டு வேலைக்காரங்க பார்த்திருக்காங்க. அவங்க இப்போ ஊரெல்லாம் சொல்லித் திரியுறாங்க. நீ அவங்கள அடிச்ச காயங்கள், அவங்க பொணம் கிடைச்ச உடனே அடிச்சது உண்மைதான்னு சொல்லும். நீதான் அவங்களை கொன்னியா?"

"கோவிந்தா, நான் அடிச்சது உண்மைதான். ஆனா அதுக்கு அப்புறம் நான் அவங்கள பார்க்கவேயில்லை. நான் கொல்லவும் இல்லே. ஏதோ வாய் சவுடாலா பேசிட்டேன். நான் அப்படி எல்லாம் செய்வேனா? என்னால அது முடியுமா? சொல்லு கோவிந்தா. ஊரே என்னை கொடுமைக்காரனா பாக்குது. கேவலமா பேசுது."

**தொடரும்...**

**விஜயா கிருஷ்ணன்**




## சர்வதேச சந்தையில் புது உச்சம் தொட்ட மைக்ரோசாப்ட்

சர்வதேச பங்குச் சந்தையில் மைக்ரோசாப்ட் நிறுவன மதிப்பு புது உச்சத்தை தொட்டது. மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் சர்வதேச பங்குச் சந்தை மதிப்பு 2 ட்ரில்லியன் டாலர்கள், இந்திய மதிப்பில் ரூ. 1,48,50,100 கோடிகளாக உயர்ந்துள்ளது. முன்னதாக அப்பிள் நிறுவனம் மட்டுமே பங்குச் சந்தையில் இத்தகைய மதிப்பை எட்டியது. உலகளவில் 2 ட்ரில்லியன் டாலர்கள் மதிப்பை அப்பிள் மற்றும் மைக்ரோசாப்ட் என இரு நிறுவனங்கள் மட்டுமே எட்டியுள்ளன. முன்னதாக 2019 டிசம்பர் மாத வாக்கில் சவுதி அராம்கோ நிறுவனத்தின் மதிப்பு 1.9 ட்ரில்லியன் அளவு உயர்ந்தது குறிப்பிடத்தக்கது.

2014 ஆம் ஆண்டு மைக்ரோசாப்ட் தலைமை செயல் அதிகாரியாக பதவியேற்ற சத்ய நாதெல்லா அந்நிறுவன வளர்ச்சியை புதிய உச்சத்திற்கு அழைத்து சென்றார். இவரது தலைமையில் கிளவுட்-கம்ப்யூட்டிங் மென்பொருள் விற்பனையில் உலகின் முன்னணி நிறுவனமாக மைக்ரோசாப்ட் உயர்ந்தது. சமீபத்தில் மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் தலைவராக சத்ய நாதெல்லா தேர்வு செய்யப்பட்டார். முன்னதாக மைக்ரோசாப்ட் தலைவராக இருந்த ஜான் தாம்ப்சன் தற்போது அந்நிறுவனத்தின் மூத்த இயக்குனராக நியமிக்கப்பட்டார்.




## அதிரடி விலை குறைப்பு பெற்ற சியோமி ஸ்மார்ட்வாட்ச்

சியோமி நிறுவனத்தின் எம்ஐ வாட்ச் ரிவால்வ் ஆக்டிவ் விரைவில் இந்திய சந்தையில் அறிமுகம் செய்யப்பட இருக்கிறது. சியோமி நிறுவனம் தனது எம்ஐ வாட்ச் ரிவால்வ் மாடலின் விலையை குறைத்து இருக்கிறது. இந்தியாவில் ரூ. 9,999 விலையில் விற்பனை செய்யப்பட்டு வந்த எம்ஐ வாட்ச் ரிவால்வ் பின் ரூ. 10,999 விலையில் விற்கப்பட்டது. பின் சலுகை விற்பனையில் ரூ. 8,999 விலையிலும் விற்பனை செய்யப்பட்டது.

தற்போது முதல் முறையாக இந்த ஸ்மார்ட்வாட்ச் ரூ. 7,999 விலையில் விற்பனை செய்யப்படுகிறது. திடீர் விலை குறைப்பு காரணமாக எம்ஐ வாட்ச் ரிவால்வ் ஆக்டிவ் மாடலும் குறைந்த விலையில் விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எம்ஐ வாட்ச் ரிவால்வ் மாடலில் மேம்பட்ட **GPS**, அதிக ஸ்போர்ட்ஸ் மோட்கள், **SpO2** மாணிட்டரிங், அமேசான் அலெக்சா வாய்ஸ் அசிஸ்டண்ட் போன்ற அம்சங்கள் வழங்கப்பட்டுள்ளன. மற்ற அம்சங்களை பொருத்தவரை இந்த மாடலில் 1.3 இன்ச் **AMOLED** ஸ்கிரீன், ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பிரேம், **FISRTBEAT** ஸ்போர்ட் அ னாலடிக்ஸ் வசதி, **GPS, 5 ATM** தர வாட்டர் ரெசிஸ்டண்ட் வசதி உள்ளது. இதில் வழங்கப்பட்டு இருக்கும் பேட்டரி அதிகபட்சம் 14 நாட்களுக்கு பேட்டரி பேக்கப் வழங்குகிறது.



## ரூ. 3.29 லட்சம் விலையில் மடிக்கக்கூடிய லேப்டாப் அறிமுகம் செய்த லெனோவோ



லெனோவோ நிறுவனத்தின் புதிய திங்க்பேட் எக்ஸ்1 மடிக்கக்கூடிய லேப்டாப் இந்திய சந்தையில் விற்பனைக்கு வந்துள்ளது.

லெனோவோ நிறுவனம் தனது மடிக்கக்கூடிய திங்க்பேட் எக்ஸ்1 லேப்டாப் மாடலை சில ஆண்டுகளுக்கு முன் அறிமுகம் செய்தது. தற்போது இந்த மாடலை லெனோவோ இந்திய சந்தையில் விற்பனைக்கு கொண்டு வந்துள்ளது. லெனோவோ திங்க்பேட் எக்ஸ்1 விலை ரூ. 3,29,000 என நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

புதிய திங்க்பேட் எக்ஸ்1 மடிக்கக்கூடிய லேப்டாப் லெனோவோ நிறுவனத்தின் விலை உயர்ந்த மாடலாக இருக்கிறது. திங்க்பேட் எக்ஸ்1 விண்டோஸ் 10 ப்ரோ ஒஎஸ் கொண்டுள்ளது. இது மடிக்கக்கூடிய டிஸ்ப்ளே கொண்ட முதல் விண்டோஸ் சாதனம் ஆகும்.

இதில் 13.3 இன்ச் **2K** ரெசல்யூஷன் **OLED** டிஸ்ப்ளே, இன்டெல் கோர் ஐ5 பிராசஸர், **11th Gen** இன்டெல் **UHD** கிராபிக்ஸ், 8 ஜிபி ரேம், 512 ஜிபி **SSD** ஸ்டோரேஜ், **50Wh** பேட்டரி வழங்கப்பட்டு இருக்கிறது. இது ஒருமுறை சார்ஜ் செய்தால் 10.4 மணி நேரத்திற்கு பேக்கப் வழங்குகிறது.

## ரீல்ஸ் அம்சத்தில் விளம்பரங்களை வழங்கும் இன்ஸ்டாகிராம்

இன்ஸ்டாகிராம் நிறுவனம் தனது செயலியின் ரீல்ஸ் பகுதியில் விளம்பரங்களை வழங்க துவங்கி இருக்கிறது.

இன்ஸ்டாகிராம் செயலியின் ரீல்ஸ் அம்சத்தில் விளம்பரங்களை வழங்குவதற்கான சோதனையை அந்நிறுவனம் துவங்கி உள்ளது. முதற்கட்டமாக இந்த சோதனை தேர்வு செய்யப்பட்ட சில நாடுகளில் மட்டும் நடைபெற்று வருகிறது. இன்ஸ்டாகிராம் ரீல்ஸ் பகுதியில் உங்களை பாளோ செய்யாதவர்களையும் விளம்பரம் மூலம் சென்றடைய முடியும்.




இதனால் அதிக பாளோவர்கள் இல்லாத சிறு வியாபாரங்கள், பிராண்டுகள் அதிக வாடிக்கையாளர்களை சென்றடைய முடியும். பிராண்டுகள் மற்றும் க்ரியேட்டர்கள் முன்பை விட அதிக பிரபலமாக ரீல்ஸ் விளம்பரங்கள் பெரும் உதவியாக இருக்கும்.

விளம்பரங்கள் வழக்கமான ரீலஸ் போஸ்ட்களை போன்றே புல் ஸ்கிரீன் மற்றும் செங்குத்தாக தோன்றும். ஏற்கனவே ஸ்டோரிக்களில் வரும் விளம்பரங்களை போன்று இவை ரீல்ஸ்களின் இடையே வரும். அதிகபட்சமாக 30 நொடிகள் வரை ரீல்ஸ் விளம்பரங்களை பதிவிட முடியும். ரீல்ஸ் பகுதியில் வரும் விளம்பரங்களுக்கு மற்ற பயனர்கள் லைக், கமென்ட், சேவ் மற்றும் ஷேர் செய்யலாம்.



**ஒரு மெழுகுவர்த்தி மற்றொரு மெழுகுவர்த்திக்கு ஒளி கொடுப்பதால் அதற்கு இழப்பு ஒன்றும் இல்லை.**

**- அப்துல் கலாம்-**




## இந்திய கிரிக்கெட் அணியின் முக்கிய வீரர் மீது ரசிகர்கள் கோபம்

உலக டெஸ்ட் கிரிக்கெட் சாம்பியன்ஷிப் இறுதி போட்டியில் இந்தியா தோற்ற நிலையில் அணியின் சீனியர் வீரருக்கு எதிராக ரசிகர்கள் கொந்தளித்துள்ளனர்.

இந்தியா மற்றும் நியூஸிலாந்துக்கு இடையேயான உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டி இங்கிலாந்தின் சவுத்தாம்ப்டன் மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியின் 5-ம் நாள் ஆட்ட நேர முடிவில் 64 ரன்களுக்கு 2 விக்கெட்டுகளை இந்திய அணி இழந்திருந்தது. அப்போது கேப்டன் விராட் கோஹ்லி மற்றும் புஜாரா களத்தில் இருந்தனர்.



இதனை அடுத்து கடைசி நாளான அன்றைய ரிசர்வ்டே ஆட்டத்தில் இவர்கள் இருவர் மீதும் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டது. ஆனால் நியூஸிலாந்து வேகப்பந்து வீச்சாளர் கெயில் ஜேமிசனின் ஓவரில், விராட் கோஹ்லி 13 ரன்களிலும், புஜாரா 15 ரன்களிலும் அடுத்தடுத்து அவுட்டாகி அதிர்ச்சியளித்தனர்.

பின்னர் 170 ரன்களுக்கு இந்தியா அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இதனை அடுத்து விளையாடிய நியூஸிலாந்து அணி 2 விக்கெட் இழப்புக்கு 140 ரன்கள் அடித்து அபார வெற்றி பெற்றது.

இதன்மூலம் ஐசிசி டெஸ்ட் சாம்பியன்ஷிப் கோப்பையை நியூஸிலாந்து அணி தட்டிச்சென்றது.

இந்த நிலையில் இந்திய வீரர் புஜாராவை சமூக வலைதளங்களில் ரசிகர்கள் விமர்சனம் செய்து வருகின்றனர். இந்திய டெஸ்ட் அணியில் சீனியர் வீரராக இருந்து வரும் புஜாரா, சிறப்பாக செயல்பட்டு நீண்ட பார்ட்னர்ஷிப் அமைக்கக்கூடியவர்.

ஆனால் கடந்த சில போட்டிகளில் அவரின் ஆட்டம் ரசிகர்களுக்கு திருப்தி அளிக்கும்படியாக இல்லை. டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டியிலும் அவரது ஆட்டம் மோசமாகவே இருந்தது.

முதல் இன்னிங்ஸில் 8 ரன்னும், 2-வது இன்னிங்ஸில் 15 ரன்களும்தான் புஜாரா எடுத்தார். இதனால் அவர் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற வேண்டும் என சமூக வலைதளங்களில் ரசிகர்கள் பதிவிட்டு வருகின்றனர்.

## விடுமுறையை கழிக்க குடும்பத்துடன் சுற்றுலா சென்ற டோனி!

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் டோனி குடும்பத்தாருடன் சுற்றுலா சென்ற புகைப்படங்கள் வைரலாகியுள்ளது.

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்ற டோனி தற்போது ஐபிஎல் போட்டிகளில் மட்டும் விளையாடி வருகிறார்.

இதனிடையே கொரோனா பரவல் காரணமாக ஐபிஎல் போட்டிகளில் கடந்த மே மாதத்தில் தள்ளி வைக்கப்பட்டது.



இந்திய வீரர்கள் இங்கிலாந்து மற்றும் இலங்கை சுற்றுப்பயணங்களுக்காக சென்றுள்ள நிலையில், சிஎஸ்கே அணியின் கேப்டன் டோனி என்ன செய்துகொண்டிருக்கிறார் என ரசிகர்கள் கேள்வி எழுப்பி வந்தனர்.

இதற்கு பதிலளிக்கும் விதமாக அவரது மனைவி சாக்ஷி டோனி வீட்டிலேயே தன் செல்லப்பிராணிகளுடன் பொழுதை கழித்து வருகிறார் என குறிப்பிட்டு புகைப்படங்களை ஷேர் செய்து வந்தார்.

இந்த நிலையில் தற்போது தோனி தனது குடும்பத்தினருடன் சிம்லா சென்றுள்ளார். இமாச்சலப் பிரதேச மாநில அரசு கொவிட் -19 விதிமுறைகளை தளர்த்தியுள்ள நிலையில், டோனி அங்கு சென்று குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் நேரம் செலவழித்து வருகிறார்.

இந்த புகைப்படங்களை சாக்ஷி டோனி மற்றும் டோனியின் மகள் ஷிவா நிலையில் தற்போது அந்த புகைப்படங்கள் தான் சமூக வலைத்தளங்களில் ட்ரெண்டிங்கில் உள்ளது.

மேலும் அதில் டோனி தனது தோற்றத்தை மாற்றி வித்தியாசமாக மீசை வைத்திருப்பதை பார்க்க முடிகிறது. டோனியின் புதிய தோற்றம் அழகாக இருப்பதாக அவரது ரசிகர்கள் பலரும் கமெண்ட்ஸ் செய்து வருகின்றனர்.

இதோடு சிம்லாவின் பாரம்பரிய டோப்பி (தொப்பி) அணிந்திருப்பதையும் காண முடிகிறது. இந்த பாரம்பரியமான மற்றும் ஸ்டைலான தலைக்கவசம் 'குலு டோபி' என்று அழைக்கப்படுகிறது.

## என்னால் சரியாக தூங்க முடிந்ததில்லை! ஒரு பதற்றம் - ஜாம்பவான் சச்சின்

என் கிரிக்கெட் வாழ்க்கையின் 10 முதல் 12 ஆண்டுகள் ஒவ்வொரு போட்டிக்கும் முந்தைய இரவுகளில் என்னால் சரியாக தூங்க முடிந்ததில்லை என சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் அளித்த பேட்டியில், கிரிக்கெட் வாழ்க்கையின் 10 முதல் 12 ஆண்டுகள் ஒவ்வொரு போட்டிக்கும் முந்தைய இரவுகளில் என்னால் சரியாக தூங்க முடிந்ததில்லை.

என் மூளையில் போட்டி குறித்த எண்ணங்கள் ஓடிக்கொண்டே இருக்கும். படுக்கையில் புரண்டுப்படுத்தாலும் தூக்கம் சரியாக வராது. ஒரு பதற்றம் இருக்கும்.

பின்பு போட்டிக்கு முன்பாக பதற்றமடைவதால் பயனில்லை, மாறாக அதற்கு ஏற்ப நாம் தயாராக வேண்டும் என்பதை புரிந்துக்கொண்டேன்.

விளையாடுவது வெறும் உடல் சார்ந்தது மட்டுமல்ல மனம் சார்ந்ததும் கூட. அதனால் போட்டியன்று நிச்சயம் நான் பதற்றமாகக் கூடாது என்று முடிவெடுத்தேன்.

அதற்கு தூக்கமும் மிக அவசியம். பின்பு நான் என்னைப் பற்றி நன்றாக புரிந்துக்கொண்டேன் என கூறியுள்ளார்.



## இந்திய அணியை கதிகலங்க வைத்த கைல் ஜேமிசன்! வெற்றிக்கு பின் சொன்ன வார்த்தை

உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில், இந்திய அணியை வீழ்த்துவதற்கு முக்கிய காரணமான, கைல் ஜேமிசன் சொன்ன வார்த்தை, கிரிக்கெட் ரசிகர்ள் பலரது வாழ்த்துக்களை பெற்று வருகிறது.

இந்திய அணிக்கெதிரான உலக டெஸ்ட் சாம்பியன் ஷிப் தொடரின் இறுதி ஆட்டத்தில், நியூசிலாந்து அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இப்போட்டியில், நியூசிலாந்து அணியின் வெற்றிக்கு மிக முக்கிய காரணமான வேகப்பந்து வீச்சாளர் கைல் ஜேமிசன் இது குறித்து கூறுகையில், இது போன்ற மிகப் பெரிய தொடரின் இறுதிப் போட்டியில், அதுவும் இந்தியா போன்ற பலம் வாய்ந்த அணிக்கு எதிராக மூத்த வீரர்களுக்கு வாய்ப்பளிக்காமல் தனக்கு வாய்ப்பளிக்கப்பட்டை எண்ணி நான் மகிழ்கிறேன்.



நீல் வாக்னர், டிம் சவுத்தி, ட்ரெண்ட் போல்ட் போன்ற அனுபவ வீரர்கள் இருந்த போதும், இந்தியா போன்ற பலம் வாய்ந்த அணிக்கு எதிராக ஆரம்ப ஓவர்களை வீச எனக்கு வாய்ப்பளிக்கப்பட்டது என்பது, எனக்கு கிடைத்த சிறப்பம்சமாக கருதுகிறேன்.

இருந்தாலும் நான் எப்போதும் அவர்களுக்கு பின்னாலேயே பயணிக்க விரும்புகிறேன் என்று அடக்கத்துடன் கூறினார். தற்போது இருக்கும் கிரிக்கெட் உலகில் ஒரு போட்டியில் ஜொலித்தால் கூட, ஆடும் வீரர்களுக்கு மத்தியில், கைல் ஜேமிசன் இப்படி அடக்கத்துடன் கூறியதை, கிரிக்கெட் ரசிகர்கள் பலரும் பாராட்டி வருகின்றனர்.

இந்த உலக டெஸ்ட் சாம்பியன் ஷிப் இறுதிப் போட்டியில், கைல் ஜேமிசன் இரண்டு இன்னிங்ஸிலும் விராட் கோஹ்லி விக்கெட்டை வீழ்த்தியி, வெற்றிக்கு திருப்பு முனையை ஏற்படுத்தி கொடுத்தார். அதுமட்டுமின்றி இந்த போட்டியில் மொத்த 7 விக்கெட் வீழ்த்திய அவருக்கு ஆட்ட நாயகன் விருது வழாங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# உலக செய்திகள்

## கொடூர தாக்குதலில் பொலிஸ் அதிகாரிகள் 11 பேர் கொலை

புர்கினா பாசோவில் திடீரென்று தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்டதில், பொலிஸ் அதிகாரிகள் 11 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். புர்கினா பாசோ என்ற ஆப்பிரிக்க நாட்டில் கடந்த 2015 ஆம் வருடத்திலிருந்து அல்கொய்தா மற்றும் ஐஎஸ் தீவிரவாத அமைப்புகளை சேர்ந்த ஆயுத கும்பல், தீவிரவாத தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறது. இதனால் தற்போது வரை 1,400 மக்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் இந்த மாதத்தின் தொடக்கத்தில் சோல்ஹான் என்ற கிராமத்தில் பயங்கர தாக்குதல் நடத்தப்பட்டதில் சுமார் 138 பேர் பரிதாபமாக பலியாகியுள்ளனர்.

இந்நிலையில் யிர்கோ என்ற நகரில் பொலிஸார் நிவாரணப்பணியை மேற்கொண்டிருந்தபோது அவர்கள் மீது கண்மூடித்தனமாக பயங்கர தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. இதில் 11 பேர் உயிரிழந்துள்ளதுடன் 6 பேர் மாயமானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயுதம் ஏந்திய மர்ம நபர்கள் இத்தாக்குதலை நடத்தியதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அந்த பகுதியில் பலத்த பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



## பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி காலமானார்!

பிலிப்பைன்ஸின் முன்னாள் ஜனாதிபதி பெனிக்னோ அக்வினோ, நீண்டகால உடல் நலப் பிரச்சினைக்கு பின்னர் வியாழக்கிழமை காலமானதாக அந் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. 61 வயதான அக்வினோ, 2010 - 2016 வரை நாட்டின் 15 ஆவது ஜனாதிபதியாக பணியாற்றியதுடன், மேலும் பல பதவிகளில் இருந்துள்ளார். தலைநகர் மணிலாவிற்கு அருகிலுள்ள கேபிடல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளதாக மையத்தில் பிலிப்பைன்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.


இது தொடர்பில் தகவல் அளிக்காத அவரது குடும்பத்தினர் விரைவில் ஒரு அறிக்கையை வெளியிடுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் அவரது மரணத்தை 2012 இல் அக்வினோவால் நியமிக்கப்பட்ட உச்சநீதிமன்ற நீதிபதி மார்விக் லியோனன் உறுதிபடுத்தியுள்ளார்.



## உலகத்தையே ஆச்சர்யத்தில் மூழ்கடித்த நபர்

சாப்பிட்ட பில் தொகையை விட பல மடங்கு அதிகமாக டிப்ஸ் கொடுத்து உலகத்தையே ஆச்சர்யத்தில் முழ்கடித்துள்ளார்

ஒரு நபர், அமெரிக்காவில் உள்ள நியூ ஹெம்ப்ஷைர் பகுதியில் இயங்கிவரும் ஹோட்டலில் சாப்பிட்ட ஒரு நபர், ரூ.2815 பில் தொகைக்கு ரூ.11லட்சம் டிப்ஸாக கொடுத்து எல்லோரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியுள்ளர்.



கொரொனா முதல் அலை மற்றும் இரண்டாம் அலையின் போது எப்போதும் போலவே ஹோட்டலில் ஊழியர்கள் பணியாற்றி வருவதால் அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இந்த அதிகத் தொகை டிப்ஸ் ஆக வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## 16 வயது சிறுவனை உயிருடன் தின்ற கரடி!

சைபீரியாவில் உள்ள ஒரு தேசிய பூங்காவில் சுற்றுலா பயணிகளை தாக்கிய கரடி சிறுவனை தாக்கி தின்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சைபீரியாவில் உள்ள **Krasnoyarsk** மாகாணத்தின் தேசிய பூங்காவில் கடந்த திங்கட்கிழமை அன்று கரடி ஒன்று சுற்றுலா பயணிகளை தாக்கியுள்ளது. அதன் பின்பு 16 வயதுள்ள ஒரு சிறுவனை தாக்கி பாதி தின்ற நிலையில் அங்கிருந்த சுற்றுலா பயணி ஒருவர் அந்த கரடியை கத்தியால் குத்தியுள்ளார்.

அதன்பின்பு அங்கிருந்த மக்கள் உடனடியாக காவலர்களுக்கு தகவல் தெரிவித்த நிலையில் சம்பவ இடத்திற்கு காவலர்கள் விரைந்தபோது துப்பாக்கியுடன் வந்த காவலர்களை பார்த்தவுடன் கரடி காட்டுப்பகுதிக்குள் தப்பிவிட்டது.

எனினும் பல மணிநேரம் போராடி காவலர்கள் கரடியை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுள்ளனர். அந்த இதேவேளை கரடிக்கு தேவையான உணவு கிடைக்காததால் இவ்வாறு தாக்கியதாக பூங்காவில் உள்ள நிர்வாகிகள் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

## சர்வதேச விமான சேவைக்கு அனுமதி அறிவிப்பை வெளியிட்ட நாடு

சர்வதேச விமான சேவைக்கு அனுமதி தெற்காசிய நாடான நேபாளம் அறிவித்துள்ளது. நாடு முழுவதும் கொரோனா பரவலை கட்டுப்படுத்த முழு ஊரடங்கு அமலில் உள்ளது.

மற்ற நாடுகளும் கொரோனா பரவலை கட்டுக்குள் கொண்டுவர ஊரடங்கு அமல்படுத்தி உள்ளன. அதனால் வெளிநாட்டு பயணங்களுக்கு தடை விதிக்கும் வகையில் சில நாடுகளின் விமான சேவை முடக்கப்பட்டுள்ளது.

கொரோனா பாதிப்பு குறைந்து வருவதை அடுத்து குறிப்பிட்ட அளவிலான விமான சேவைக்கு அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது. கொரோனா தொற்று கடுமையாக பரவிய காரணமாக நேபாளத்தில் சர்வதேச விமான போக்குவரத்து சேவைகளும், உள்ளூர் விமான போக்குவரத்து சேவையும் ரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில் தற்போது கொரோனா பாதிப்பு குறைந்து வரும் நிலையில் சர்வதேச விமான சேவைகள் துவங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஜுலை 1-ஆம் திகதியிலிருந்து உள்ளூர் விமான சேவைகள் தொடரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 120 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு ரஷ்யாவில் சுட்டெரிக்கும் வெயில்!

ரஷ்யாவில் 120 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சுட்டெரிக்கும் வெயில் அந்நாட்டு மக்களை வாட்டி வதைக்கிறது. இந்நிலையில் வெயிலில் இருந்து தப்பிக்க கடற்கரை, நீர்த்தேக்கம், பூங்கா என குளிர்ச்சியான பகுதிகளுக்கு ரஷ்யர்கள் படையெடுக்கின்றனர்.

ரஷ்யாவின் சென் பீட்டர்ஸ் பர்க் நகரில் உள்ள இந்த கடற்கரையில் மக்கள் கூட்டம் குவிந்துள்ளது இந்தியாவில் 40, 41 டிகிரி செல்சியஸ் என வெயில் கொளுத்துவது சர்வ சாதாரணம் என்றாலும் குளிர் பிரதேசமான ரஷ்யாவில் நிலவும் 34 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையை தாங்க முடியாமல் அந்நாட்டு மக்கள் தவித்து வருகின்றனர்.

தலைநகர் மாஸ்கோவிலும் இதே நிலைமைதான். மாஸ்கோவில் கடந்த திங்கட்கிழமை பதிவான 34.7 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை 120 ஆண்டுகளில் இல்லாதது என்று வானிலை மையம் கூறியுள்ளது.

வாட்டி வதைக்கும் வெயிலில் இருந்து தப்பிக்க நகரின் மையத்தில் அரசு கட்டிடங்களின் எதிரே அமைக்கப்பட்டுள்ள செயற்கை நீரூற்றுகளின் அருகே அமர்ந்துகொண்டு மக்கள் இளைப்பாறுகின்றனர். நீரூற்றுகளில் வரும் தண்ணீரில் விளையாடியபடி நீண்டநேரம் பொழுதை கழிக்கின்றனர்.


கடற்கரைகள், பூங்காக்கள் மட்டுமின்றி ஒருசிலர் ரஷ்யாவின் எகோடியா நகரில் பனிப்படலங்கள் நிறைந்த பகுதிகளுக்கும் பயணிக்கின்றனர். கோடை காலத்தில் இறைச்சி மற்றும் சூடான உணவுகளை தவிர்க்கும் ரஷ்யர்கள், ஐஸ்கீரிம் மற்றும் குளிர்பானங்களை வாங்கி உண்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். இந்நிலையில் பருவநிலை மாறுபாடே ரஷ்யாவில் வெப்பம் அதிகரிப்பதற்கு காரணம் என வானிலை ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.




# படம் – சொல்லும் கதை


**இன்றைய காலக்கட்டத்தில் நாம் எப்படி வாழ்ந்து கொண்டு இருக்கிறோம் என்பதை இந்த படங்கள் காண்பிக்கிறது.**


















## கொரோனா வைரஸிலிருந்து எப்படி தற்காத்து கொள்வது?



அடிக்கடி கைகளை கழுவவும்



தும்மலின் போது **Tissue** பேப்பரை மட்டும் பயன்படுத்தவும்



பயன்படுத்திய **Tissue** பேப்பர்களை முறையாக அப்புறபடுத்திவிட்டு கைகளை கழுவவும்



**Tissue** பேப்பர் இல்லை என்றால் சட்டை **Sleeve**ஐ பயன்படுத்தவும்



கையை மூக்கு, கண் மற்றும் வாய் பகுதி அருகே எடுத்து செல்வதை தவிர்க்கவும்



உடல்நிலை சரி இல்லாத நபர்கள் அருகே நெருக்கமாக செல்வதை தவிர்க்கவும்




இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 27.06.2021 அன்று வெளியிடப்பட்டது.